36

உ

# மனமோகினி

ஓர் மாதாந்தச் சஞ்சிகை

(முதல்தர நாவல்கள்)

தொகுதி 1.] 1922ஞு ஜுலைமீ 1௳ [பகுதி 6.

இந்த அமராவதி யென்னும் நாவல்
ஸ்ரீமான்
ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்களால்
இயற்றப்பட்டது

18 AUG 1922

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியாரால்
பிரசுரிக்கப்பட்டது

1922

காபிரைட்] [ரிஜிஸ்டர்ட்.

# மனமோகினி

## ஓர் மாதாந்தச் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களை வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள் அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் தர வேண்டியதா யிருத்தலின், அதில்ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதா யிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று இதனை ஆரம்பித்திருக்கின்றோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொரு முறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். ஒரு வருஷத்துக்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்கள் ளைபண்டாகிவிடும். இப்போது முதலில் மகா அற்புதம் பொருந்திய அநேகம் நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" என்னும் நாவல் வெளியாய் வருகிறது. இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. இதற்குச் சந்தாதாரராகச் சேர்வோருக்கு இரண்டரை ரூபாய்க்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்களை அடைதலும், சிரமமின்றி ஒவ்வொரு மாதத்திலும் வாசித்து வந்து ஒரு வருஷத்தில் இரண்டு புத்தகங்களை முடித்தலுமாகிய சௌகரியங்கள் கிடைக்கும். இதன் முதற் சஞ்சிகை 1922ஞு பிப்ரவரிமீ 1உ வெளியாயாய்விட்டது. அடியிற் கண்ட விலாசத்திற்கு உடனே எழுது. முதல் சஞ்சிகையை வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக்கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணுவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டதினால் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

---

மானேஜர்: "ஆனந்த நிலயம்"

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்.

யோடு மறந்துவிடு. மடத்தில் உன்னைச் சேர்த்துக் கொண்டு சுகமாக உனக்கு வேண்டிய சௌகரியங்களோடு காப்பாற்றப் போதுமான அவ்வளவு பணம் தாராளமாக அளிக்கிறேன்'' என்றார்.

சீமாட்டிக்குக் கடைசியில்தான் தன் புருடனுக்குத் துரோகம் செய்த குற்றம் அபாரமானதென்று மனதிற் புலப்பட்டது. ஆகையால் கணவன் தன்னை மன்னிப்பதாகக் கூறியதே அவர் பாதங்களிற் பணிந்து தன் குற்றத்திற்காக மனத்தாபப் பட்டாள்.

அம்மாது எழுந்து நிற்கும் சமயம் ஜனரல் உக்கிரசேனர் அறைக்குள் வந்தார். சீமாட்டியவரைக் கண்டதும் "ஓ புண்ணிய புருஷரே! நீர் எனக்குப் புதிய மனிதரே யாயினும் உமது பெயரை மட்டும் இப்போது நான் ஐந்து முறை கேட்டேன். அது கம்பீரமும் பிரசித்தியும் பெற்றதாகவே தோன்றுகிறது. நீர் எனக்குச் செய்த உதவிக்காக நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன். ஆண்டவனே யுமக்குப் பிரதிபலன் அளிக்க வேண்டும். நான் மிக்க நன்றியோடு மறுபடி யுமக்குப் பல்லாயிரம் வந்தனங்க ளளிக்கிறேன்'' என்றாள்.

ஜனரல்.—"சீமாட்டியே! தாங்கள் எனக்கு வந்தனமளிக்கவேண்டிய அவசியமே யில்லை. மனிதர் ஒருவருக்கொருவர் செய்யவேண்டிய கடமையே நான் செய்தேன்'' என்றார்.

அச்சமயம் அவர் மனத்தில் உண்டான உணர்ச்சியையும், துயரத்தையும், கோபத்தையும் அவர் மிக்க கஷ்டத்தோடு அடக்கிக்கொண்டார்.

பிரபு அவரை நோக்கி "ஜனரல்! என் மனைவி பாஞ்சால நாட்டிற்குச்சென்று அங்குள்ள ஒரு மடத்தில்

86480

தன் காலத்தைக்கழிக்கப் பிரியப்படுவதாய் தானே கூறினாள்" என்றார். சீமாட்டி "ஆம், நானே கூறினேன். இவர் கூறுவது உண்மையே. உமது உதவிக்கு மறுபடி வந்தனம்" என்றாள்.

ஜனரல் பிரபுவை யுற்றுநோக்கி "பிரபுவே! தாங்கள் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி திருப்தியாக நடந்துகொள்வீர்களென்றும், இச்சீமாட்டிக்கு இனி எத்தகைய இக்கட்டையும் உண்டாக்கமாட்டீரென்றும் நம்புகிறேன். அப்படி நீர் செய்தால் அச்சங்கதி எனக்குக் கட்டாயம் அறிவிக்கும்படியான ஏற்பாடு செய்தேயிருப்பேன் என்று நம்பும்" என்றார். பிரபு ஒருவித வெறுப்போடு "ஆம். தெரியும் என் வேலைக்காரர்களை வஞ்சகமாக மயக்கித் துரோகம் செய்யும்படி செய்து..." என்றதே,

ஜனரல் "ஏ! பிரபுவே! இதையொரு அம்பாய்க் கருதியெய்தீர். அது என்னிடம் செல்லாது. நீர் அக்கிரமமாக உமது மனைவியை நெடுங்காலமாக இப்படிச்சிறைவைத்திருந்தது எனக்குத் தற்செயலாகத் தெரியவந்தது. ஆகவே எனக்குத்தெரிந்த சில சங்கதிளால் உமது வேலைக்காரரை மிரட்டி அந்த உண்மையை யறிந்து அந்த அக்கிரமத்தை நிவர்த்தி செய்தது ஒருபோதும் அகௌரவத்தொழிலாகாது. அதோடு நிரபராதிகளாகிய அக்கன்னிகையையும் அவள் அத்தையையும் அநீதமாய் நீர் பிடித்து வந்து, இன்னும் கடவுளுக்குச் சம்மதமில்லாத பெரிய அநீதத்தைச்செய்ய முயன்றதைத்தடுத்தது தப்பிதமாகாது. இருக்கட்டும்; கிரிநாதனையும் அவன் தம்பியையும் அதற்காகத் தண்டிக்கக் கருதமாட்டீரென்று நம்புகிறேன். ஏனெனில் உமது பயங்கர இரகசியங்களைத்

தும் அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. அதுவுமன்றி நீர் அவர்களை வேலையினின்று நீக்கிவிட்டாலும் அவர்களுக்குச்சீவிக்கப்போதுமான உதவியிருக்கிறது. இனி நான் ஒன்றும் கூறவேண்டியதில்லை. ஆனல் ஒரு வேண்டுகோள் மட்டும். அதாவது அமராவதியையும், அவள் அத்தையையும் அவர்கள் வீட்டிற்கழைத்துச் செல்ல இரண்டு குதிரைகள் வேண்டும். உமது குதிரைகளில் இரண்டு குதிரைகள்தான் அனுப்பவேண்டும்'' என்ருர்.

அரைமணி நேரத்திற்குள் ஜனரல் உக்கிரசேனரும் அமராவதியும் அவள் அத்தையும் சுகவிலாசத்தினின்றும் புறப்பட்டார்கள்.

---

## 29-வது அத்தியாயம்

அமராவதி முதலியவர்கள் தங்கள் வீடு போய்ச் சேர்தல்—மனங்கலந்த சம்பாஷணை—கர்னல் இரகுநாயகரும் ஜனரல் உக்கிரசேனரும் சம்பாஷித்தல்—எட்டிக்குடியில் உலகநாயகன் — மதனம்பாள் சீமாட்டியும் உலகநாயகனும்—ஜெனரல் உக்ரசேனர் சமயத்தில் வந்துதவல்—பெருந்தன்மையான ஏற்பாடுகள்.

---

அன்று மாலை அமராவதியும் அவள் அத்தையாகிய இராஜாம்பாளும் இரொட்டிக் கிடங்கிலிருந்து உலவப்புறப்பட்டு நெடுநேரம் வரையில் திரும்பி வராமலிருக்கவே கர்னல் இரகுநாயகரும் அவர் மனைவியும் கலக்கமடைந்தார்கள். கர்னல் உடனே குதிரை யேறிச் சென்று ஆற்றோரத்திலும் வயலிலும் சாதாரணமாக உலவ

யோக்கியமான விடங்களிலெல்லாம் பார்த்தார். எங்கும் அவர்களில்லை. ஒகோ அவர்களுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்துவிட் டிருக்கவேண்டும் என்று திகிலடைந்து ஆற்ருேரம் முழுமையும் காலடிகளைத் தேடிப்பார்த்தார். அவர்கள் ஆற்றில் விழுந்து மடிந்தார்களென்ருவது, நீரின் ஓரத்திற்சென்ருர்க ளென்ருவது காட்ட ஒரு அறிகுறியும் காணப்படவில்லை. பொழுது போகப்போக வீட்டிலுள்ளோர் மனக்கலக்கம் மிக்க அதிகமாய்விட்டது.

கர்னல் இரகு நாயகர் தன்னிடம் உள்ள ஆட்களனைவரையும் அனுப்பி நாலாதிக்குகளிலும் தேடச்செய்தார். தேடச்சென்றவர்களில் ஏறக்குறைய அனைவரும் அபஜெயத்தோடு திரும்பி வந்து சேர்ந்தார்கள். பொழுது போய் இரவு மணி செல்லச்செல்லப் பெற்ருேரின் மனவருத்தம் பொறுக்க முடியாத தாய்விட்டது.

கடைசியில் இரவு மணி பதினென்றுக் கதிகமாய் விட்டது. இப்போது அமராவதியின் தாயார் மனே வியாதியைச் சகிக்க முடியாமல் அதே வியாதி யுற்றுப் படுக்கையாய் விட்டாள். கர்னல் மிக்க துயரத்தோடு தம்மாலானவரையில் தேறுதல் கூறிக்கொண்டு தன் மனைவியருகில் உட்கார்ந்திருந்தார். அப்போது திடீலென்று அகழியின் பாலத்தை நெருங்கிக் குதிரைகள் வரும் சத்தம் கேட்டது. அதோடு காணுமற் போனவர்களைத் தேடப் போய் அப்போதுதான் கடைசியாகத் திரும்பிவரும் இரண்டு மூன்று பேருடைய சந்தோஷ சத்தமும் அவர்கள் செவியிற்கேட்டன. உடனே இருவரும் துள்ளியெழுந்து வாயிற்படியை நோக்கிச்சென்ருர்கள். அவர்கள் வாயிற்படி யருகிற் சென்றபோது மூன்றுபேர் புரவிகளினின்றும் இறங்குவதைக்கண்டார்கள்.

அமராவதி முன்னடி இறங்கி வந்து அம்மாவென்று தன் மாதாவைக் கட்டிக்கொண்டாள். ஜனரல் உக்கிரசேனர் மூர்ச்சையினால் உண்டான ஆயாசத்தினின்று இன்னும் பூரணமாய்ச் சுகமடையாதிருக்கும் இராஜாம்பாளை மெதுவாய்க் குதிரையினின்று இறக்கி அவள் புயத்தைப் பற்றி யழைத்துக்கொண்டு வந்தார். யாவரும் மாளிகைக்குள் பிரவேசித்து ஒரு அறையில் உட்கார்ந்ததும், பெற்றோர்க்குண்டான சந்தோஷத்திற் களவேயில்லை. முதலில் சுருக்கமாக இரண்டு மாதரும் ஆபத்தினின்று தப்பியதைக் கேட்டதும், கர்னலும் அவர் மனைவியும் ஜனரலிடம் காட்டிய நன்றிபுகழத்தக்கது. ஜனரல் உக்கிரசேனர் பிறகு அமராவதியை நோக்கி அவர்கள் பிடித்துக்கொண்டு போகப்பட்ட விவரத்தைக் கூறச்சொன்னர். அதைக் கேட்டதே கர்னல் இரகுநாயகர் மனம் படபடத்துத் துடித்தது. அவர் முகம் சிவந்து கைகால்கள் துடித்தன. அதன்பிறகு ஜனரல் தாம் அவர்களை மீட்டு வந்த விவரத்தைக்கூறினர். அப்போதுதான் இதில் அரசன் எவ்வளவு வரையில் சம்பந்தப்பட் டிருக்கிருனென்று கர்னலும் அவர் மனைவியு முணர்ந்தார்கள். ஆயினும் இராஜாம்பாள் சம்பந்தமான இரகசியத்தை ஜனரல் கூறவில்லை. அதை யவளே கூறுவது நலமென்று மற்றசங்கதிகளைப் பற்றி மட்டும் கூறிவிட்டு ஜாடையாய் அறைக்கு வெளியிலுள்ள தாழ்வாரத்தில் சென்று உலவிக்கொண்டிருந்தார்.

இராஜாம்பாள் தன்னை யேமாற்றி வஞ்சித்து மோசம் செய்த மாபாதகனுகிய அப்பாசாமி என்பவன் அரசனே என்று தன் தமையனிடம் கூறியதே கர்னலுக்கு உண்டான கோபத்திற்களவேயில்லை. கர்னல் யாவும் கேட்டபின் ஆசனத்திலிருந்து எழுந்து கரங்களை மார்பின்

மேற்கட்டிக்கொண்டு மௌனத்தோடு அறையில் முன்னும் பின்னும் உலவத்தொடங்கினர்.

அவர் ஒன்றும் கூறுமல் மௌனமாக விருந்தாலும் அவர்மனதில் ஏதோ பயங்கரமான யோசனை யிருந்து கொண்டிருக்கிறதென்று அங்குள்ளவர்களுக்கு நன்கு புலப்பட்டது. இராஜாம்பாள் தன் தமையன் நோக்கத்தை நன்குணர்ந்து எழுந்துபோய் அவர் பாதங்களிற் படிந்து "அண்ணு! வேண்டாம். அத்தகைய யோசனையை யடியோடு விட்டுவிடு. நான் முன்னமே எவ்வளவோ துன்பத்தை யனுபவித்தேன். அதன் வாசனை யின்னும் மனதை வாட்டிக்கொண்டே யிருக்கிறது. இன்னும் நம்மால் நமது தமையனுக்கு ஆபத்து நேர்ந்தது என்ற துயரமும் என் மனதிலுண்டாகச் செய்யவேண்டாம்" என்று பிரார்த்தித்தாள். உடனே அமராவதியும் அவள் தாயும் எழுந்து போய் வஞ்சந்தீர்த்துக் கொள்ளும் எண்ணத்தை விட்டுவிட வேண்டுமென்று கோரினர்கள். கர்னல் நீங்கள் மனக்கலவரமடையாது பேசாதிருங்கள் என்று ஒருவாறு சமாதானம் கூறியபின் யாவரும் சயனத்திற்குச்சென்றூர்கள்.

மறுநாள் கர்னலும் ஜனரல் உக்கிரசேனரும் அதிகாலையில் நித்திரைவிட் டெழுந்து காலைப்போஜனத்திற்கு முன் உலவச்சென்றூர்கள். ஜனரல் கர்னல் இரகுநாயகரை நோக்கி,

"நண்பரே! இரவு மிக்க பொழுதாய்விட்டதால் என் மனதிலிருந்த யாவும் கூறச்சமயமாயில்லை. இப்போது நடந்த சங்கதிகளைத் தாங்கள் பொறுமையாகவும் நிதானமாகவும் சிந்திக்க வேண்டும். குற்றங்கள் நடந்தவை நடந்து விட்டன. அவற்றை யிப்போது இனிச் செய்யும் எக்காரியங்களாலும் திருப்பமுடியாதென்பது திண்ணம்.

இப்போது முதலாவது மேஜர் உலகநாயகனைப் பூரணமாக மன்னித்துவிட்டுத் தன் ஆஸ்தி முழுமைக்கும் பட்டத்திற்கும் அவனைச் சுதந்திரவாளியாக ஒப்புக்கொள் ளும்படி பஞ்சநாதம்பிரபு அரசனால் பலவந்தப்படுத்தப் படுவார். அது மட்டுமல்ல, உலகநாயகன் அமராவதியை மணம்புரிவதற்கும் அவர் சம்மதிக்கவேண்டும். இரண் டாவது நான் கூடியசீக்கிரத்தில் இந்நாட்டை விட்டுச் செல்ல விருப்பதால் நான் இருக்கும்போதே தாங்கள் அவர்கள் திருமணம் நடந்தேறும் வண்ணம் அனுமதி யளிக்கவேண்டுமென்று கோருகிறேன். மூன்றுவது பஞ்ச நாதம்பிரபுவின் மேலும் அரசன் மேலும் வஞ்சந்தீர்த்துக் கொள்ள வேண்டுமென்கிற எண்ணத்தை யடியோடு விட்டு விடக்கோருகிறேன். ஏனெனில் பிரபுவுக்கு இப்போது நடந்ததே போதுமான சிட்சை. அவருடைய சுபவஞ்சக மான ஏற்பாடுகளனைத்தும் அடியோடழிக்கப்பட்டன. அவர் தன் மனைவியைக் கடந்த பதினைந்து வருடங்களாக மிக்க அக்கிரமமாகச் சிறையில் வைத்திருந்த இரகசியம் வெளியாய் விட்டதோடு, அச்சீமாட்டி அவருடைய பயத்திலிருந்து விடுவிக்கப்பட்டாள். எல்லாச் சங்கதி களும் அவருடைய வேலையாட்களுக்கெல்லாம் தெரிந்து விட்டன. இத்தோடு உலகநாயகன் மேல் எவ்வளவு கோப மிருப்பினும், அவர் அவனை யேற்றுக்கொண்டு அவன் அமராவதியை மணம் செய்ய ஒப்புக்கொள்ள வேண்டிய தாய்விட்டது. இவையே அவருக்குப் போதுமான சிட்சை.

அரசன்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டு மென்பது நினைக்கவே தகாத விஷயம். ஏனெனில் அது நமக்கே கெடுதியாய் முடியும்'' என்றார்.

கர்னல் இரகுநாயகர்.—நண்பரே! நீர் என் குடும்பத்திற்குச் செய்த உதவிகள் அரியவை. அதோடு உமது சுத்தவீரத்தன்மையையும், உதாரம் முதலிய குணங்களையும் நோக்கும்போது உமது நட்பு எனக்குக் கிடைத்ததற்காக நான் கடவுளை வாழ்த்துகிறேன். உமது புத்திமதியை யேற்றுக்கொள்ள வேண்டுமென்பதே என் அபிப்பிராயம். ஆயினும் தங்களை யொன்று கேட்கிறேன். அதற்கு மனப்பூர்வமான விடையளிக்க வேண்டுகிறேன். அதாவது தங்கள் தங்கைக்கு ஒருவன் இத்தகைய அநீதத்தைச் செய்தால் தாங்கள் என்ன செய்வீர்கள்?'' என்றார்.

ஜனரல் உக்கிரசேனர் சற்றுநேரம் சிந்தித்து, ''ஆ நானுகவிருந்தாலா? நான் உடனே அத்துஷ்டன் மேல் கட்டாயம் வஞ்சம் தீர்த்துக்கொள்வேன்'' என்றார். கர்னல் இரகுநாயகர் ''ஆ! அவ்வாறுதான் கூறுவீர்களென்று அறிவேன்'' என்றார்.

ஜனரல்.—ஆயினும், கர்னல்! ஒரு விஷயம் சிந்திக்கத் தக்கது. என்னல் ஆதரிக்கப்படவேண்டியவர்கள் ஒருவருமில்லை. மனைவியாவது மக்களாவது சுற்றத்தாராவது எனக்கொருவருமேயில்லை. நான் அவ்வாறு வஞ்சந்தீர்த்துக் கொள்வதனல் என்ன இடையூறுகள் எனக்கு நேரினும் அவை யொருவரையும் பாதிக்கமாட்டா. நீர் அப்படியல்ல. உமது அன்பார்ந்த மனைவி, உமது ஏகபுத்திரி, இதுகாறும் மிக்க மனேவேதனைகளையே யனுபவித்து இப்போதுதான் உமது அன்பான ஆதரணையில் வந்து சேர்ந்திருக்கும் உமது தங்கை, இவர்களை

யாதரிக்கவேண்டிய கடமை யுமக்கிருக்கிறது. கோபத்தாலுண்டாகும் அற்பவாஞ்சையாகிய வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள இச்சைகொண்டு இவர்களை யெல்லாம் அநாதரவாய் அலையவிட்டு விடுவது நியாயமாகுமோ? உமது மனம் அதற்குச் சம்மதிக்கலாகுமோ? சற்று சிந்தித்துப்பார்த்தால் அப்படிச் செய்யத்தகாதென்று தங்களுக்கே விளங்கும்'' என்ருர்.

கர்னல் சற்றுசிந்தித்து "நண்பரே! உம்மிடமுள்ள பெருந்தகைமையோடு உமது அறிவு மிக்க தீக்ஷணியமானது. உம்முடைய சிநேகம் எனக்குக் கிடைத்ததற்காக நான் மிக்க பெருமையடைகிறேன். உமது ஆலோசனைப்படியே நடக்கச் சித்தமாக விருக்கிறேன். ஆனல் நடந்தசங்கதிகள் யாவும் உலகநாயகனுக்கு அறிவிக்கப்பட வேண்டும்'' என்ருர்.

ஜனரல்.—"நானே உடனே புறப்பட்டு எட்டிக்குடிக்குச் சென்று யாவும் அவனுக்கு அறிவிக்கப் போகிறேன்'' என்ருர்.

அதன் பிறகு விசேஷ சம்பாஷணை யொன்றும் நடைபெறவில்லை. ஜனரல் உக்கிரசேனர் காலைப்போஜனம் அருந்தியதும் எட்டிக்குடிக்குப் புறப்பட்டார்.

இரொட்டிக்கிடங்கில் இச்சம்பவம் நடக்கும் அதே சமயத்தில், எட்டிக்குடியில் என்ன நடக்கிறதென்று கவனிப்போம்.

மேஜர் உலகநாயகன் சிறையிலிருந்து விடுதலையடைந்த இரண்டாவது நாள், அதாவது 28-ம் தேதி காலை அவன் தன் அறையில் உட்கார்ந்துகொண் டிருக்கிருன். அவன் மனதில் சந்தோஷமேயில்லை. ஏனெனில் தான்

காதலித்த கன்னிகையை மணம் புரிவதற்குத் தன் மாம னும் அரசனும் பெரிய இடையூருக விருக்கிருர்கள். அர சனே தன் மனம்போனபடி தன்னைக் குரூரமாகவும் அக்கிரமமாகவும் நடத்துகிருன். சிறையிலிருந்து விடுபட் டதேநேராய்த் தன் பட்டாளத்தில் போய்ச் சேரவேண் டுமென்றும், மறுபடி தான் கட்டளையிடுமட்டும் அங் கிருந்துவெளிச்செல்ல லாகாதென்றும் கண்டிப்பான கட் டளையிட் டிருக்கிருன். தன் வேலையை இராஜிநாமா கொடுத்துவிட்டால் தன் பிரியப்படி நடக்கப் பூரண சுயா தீனமடையலாம். ஆதலால் வேலையைவிட்டு விடுவதே நலம் என்று கருதிக்கொண் டிருந்தான்.

உலகநாயகன் அவ்வாறு மனச்சோர்வான சிந்தனை யிலிருக்கையில் வேலையாள் வந்து ஒருமாது தங்களைக் காண வந்திருக்கிருர்களென்று கூறினுன். உலகநாயகன் முதலில், தான் விடுதலையடைந்த பிறகு அமராவதியைக் காணுதபடியால், விடுதலையடைந்தது உண்மையாவென்று அவளறியவந்தனளோவென்று கருதினுன். ஆனல் மறு விஞடியே யவள் அவ்வாறு தனியாக வராள் என்று சிந் தித்துக்கொண்டு, வந்த ஆளின் பெயர் என்னவென்று கேட்டான். வேலைக்காரன் "அந்தம்மாள் முகமூடி யணிந் திருக்கிருர்கள். பெயரைக்கூறவேண்டிய அவசியமில்லை யென்று கூறினுர்கள்" என்ருன். உலகநாயகன் சரி யுள்ளேயனுப்பென்ருன்.

உடனே யுள்ளே வந்து அவன் எதிரில் நின்ற அம் மாது தன் முகமூடியைக்களைந்து கொண்டே மிக்க ஆயாச மடைந்தவள் போல் அங்கிருந்த ஒரு சோபாவில் அமர்ந்தாள். அவள் யாரென்றறிந்ததே உலகநாயகனுக் குண்டான வியப்பும் கோபமும் வெறுப்பும் கூற

முடியா. ஏனெனில் அவள்—மதனம்பாள் சீமாட்டியே. அவள் நோக்கம் இன்னதென்றறிந்த உலகநாயகன் இன்னது கூறுவதென்றுணராமல் திகைத்தான்.

சீமாட்டி, என்னை யிங்குகாண்பதால் நீ மிக்க வியப்படைகிறாய் என்றாள். உலகநாயகன் "சீமாட்டியே! உன் துணிகரத்திற்கு வியப்படைவதோடு நீ இத்தகைய அகௌரவ நடக்கைக்கு இவ்வளவு சுலபமாகத் துணிந்தது எனக்கு மிக்க மனவருத்தத்தையும் வெறுப்பையுமுண்டாக்கியது" என்றான்.

சீமாட்டி தனக்கு வந்த கோபத்தை யடக்கிக்கொண்டு, "ஆ! நான் எவ்வகைப்பட்ட ஆபத்திற்கெல்லாம் துணிந்து இங்கு வந்தேன் என்பதை யறிந்திருந்தால், உன்மேல் எனக்கிருந்த அன்பே என்னை யவ்வாறு செய்யத் தூண்டியதென்பதை யுணர்ந்திருந்தால், நீ யிவ்வாறு கூறியிருக்கமாட்டாய். நீ யந்தக்கர்னலின் பெண்ணை மணம்புரிய விரும்பினாய் என்பதைக்கேட்டதே எனக்கு உன்மே லிருந்த அன்பு வெறுப்பாகமாறிவிட்டது. ஆயினும் அது நிலைக்கவில்லை. ஆகையால் எனக்கிருக்கும் காதலின் தன்மை யித்தகையதென உனக்குப் பிரத்தியக்ஷமாய் விளங்கும்படி செய்தால் அப்போது உன்மனம் திரும்பும் என்று நம்பினேன். நான் உனக்கு எவ்வளவோ நன்மை செய்யக்கூடும்..." என்றாள்.

நேயர்களே! இத்தகைய ஆபாசக்காட்சிகளை விவரித்துக்கூற நமக்குப்பிரியமில்லை. ஆயினும் கதையின் போக்குக்கு இதைக்கூறவேண்டிய அவசிய மிருப்பதால் இதைச்சுருக்கமாகக்கூறி மேற்செல்வோம். இச்சீமாட்டி தன் மாயஜால மனைத்தும் காட்டி அவனைத் தன் அக்கிரமச்செய்கைக்கு உடன்படுத்த முயன்றாள். நன்னெறியை

புடைய எவன்றன், எவ்வளவு வாலிபனாயினும், இத்த கைய தகாத செய்கைக்கு உடன் படுவான். அதோடு உலகநாயகன் ஒரு கன்னிகையைப் பூரண அன்போடு காதலித்து அவளை மணம் செய்ய எண்ணியிருக்கிறன். அவள் உருவம் தன் எதிரில் நிற்பது போல் தோன்றும் போது அவளுக்குத்துரோகமான செயலுக்கு உடன் படுவானே?

ஆகையால் அச்சீமாட்டி எவ்வளவு கூறியும் அவன் கேட்காமல் கடைசியில் அவளை இழித்துக்கூறி "நீ யின்னும் இதைவிட்டுப் போகாமலிருந்தால் என்வேலையாளை யழைத்து உன்னை வெளியிற் றள்ளச் செய்வேன்" என்றன். இம்மொழிகளைக்கேட்டதே சீமாட்டி மிக்க அவமானமடைந்து அடங்காக் கோபங்கொண்டு,

"சற்று அவசரப்படாதே. இனி இத்தகைய வார்த்தை யொன்றை யேனும் உபயோகிப்பே னென்று கருதாதே. கனவிலும் நினையாதே. ஆயினும் நான் உன் மேல் அளவு கடந்த காதல்கொண் டிருந்தேன் என்பது உண்மையே. அதனாலேயே முதலிலுண்டான வெறுப்பை யடக்கிக்கொண்டேன். இப்போது அந்த அன்பு முழுமையும் வெறுப்பாக மாறிவிட்டது. என் அன்பை யலட்சியமாய் அவமதித்தாய். இப்போது என் வஞ்சத்திற்கு நடுங்கு. உனக்கும் நீ மணம்புரியப்போகும் அப்பெண்ணுக்கும் நான் கொடிய விரோதி யென்று நன்றய் மதித்துக்கொள். இதற்காக உங்கள்மேல் நான் பயங்கரமான வஞ்சம் தீர்த்துக்கொள்ளாம லிரேன்" என்று மிக்க ஆத்திரத்தோடு கூறிவிட்டு வெளியிற் செல்லத் திரும்பினள். அதேவினடி கதவு படீரென்று திறக்கப்பட்டதும் ஜனரல் உக்கிரசேனர் அறைக்குள் நுழைந்தார்.

நேயர்களே! திடீலென்று ஜனரல் உக்கிரசேனரைக் கண்டதே யச்சீமாட்டியின் மனோநிலைமை யெவ்வாறிருந் திருக்கு மென்பதை நீங்களே சிந்திக்கலாம். அவள் சிர சின் மேல் பலத்த அடிபட்டவள் போல் அங்கிருந்த ஆச னத்தில் சாய்ந்து விட்டாள். ஜனரல் அவளும் உலகநாய கனும் இருந்த நிலைமையாலும், அவள் அங்கு வந்திருப்ப தாலும், அங்கு நிகழ்ந்த விஷயத்தின் உண்மையை யறிந்து கொண்டார்.

உலகநாயகன் "ஜனரல்! தாங்கள் இச்சமயத்தில் வந்ததற்காக மிக்க வந்தன மளிக்கிறேன். ஏனெனில் என் மனதிற்கு மிக்க வியாகூலத்தை யுண்டாக்கிய சம் பவம் முடிவிற்கு வந்து விட்டது. என் யோக்கியதையைக் காப்பாற்றிக்கொள்ளவே நான் இதைப்பற்றிக் கூறவேண் டியதாயிற்று" என்றான். ஜனரல் "உலகநாயகம்! நீ அதைப்பற்றி எனக்குக்கூறவேண்டிய அவசியமே யில்லை" என்று இயம்பி விட்டு மதனம்பாளை நோக்கி, "சீமாட் டியே, இச்சங்கதியை நாங்கள் அடியோடு மறந்து விட வேண்டுமாயின் நீ இப்போது இங்கு வந்தது எக்காரணத் தாலோ அக்காரணத்தை யடியோடு மறந்துவிடவேண் டும்" என்றார்.

சீமாட்டி "நான் உங்கள் இருவருடைய பெருந்தன் மையான உதாரகுணத்தையே நம்பி விடுகிறேன்" என் றாள். ஜனரல் உக்கிரசேனர் "சீமாட்டியே! எங்களுக்கு இடுக்கண் விளைவித்தாலன்றி நாங்கள் ஸ்திரீகள்மேல் புஜங் தொடுக்கிறவர்களல்ல. நீமட்டும் எங்களுக்கு எத்தகைய இடையூறும் கருதாது நடந்து வருவாயாயின் உன் இரக சியம் எங்களிடம் பத்திரமாகவே இருக்கும்" என்றார். சீமாட்டி யுடனே எழுந்து அறையை விட்டுச்சென்றாள்.

உக்கிரசேனரும் உலகநாயகனும் ஏகாந்தமாய் அறையில் உட்கார்ந்ததும், ஜனரல் சாவதானமாய் நடந்த விஷயங்களைக் கூறத்தொடங்கினர். சுகவிலாசத்தில் நடந்த விஷயங்களைக் கேட்டபோது அவன் மனதில் அடங்காத கோபமும் வருத்தமும் உண்டாயின. ஆயினும் பொறுமையோடு யாவும் கேட்டுக்கொண்டிருந்தான். ஏனெனில் கடைசியில் எல்லா இக்கட்டுகளும் நீங்கி நல்லமுடிவே நேர்ந்தது என்று அவன் ஆரம்பத்திலேயே உணரும்படி ஜனரல் செய்திருந்தார். கடைசியில் பஞ்சநாதம்பிரபு அவன் விஷயத்தில் ஒப்புக்கொண்ட நிபந்தனைகளையும், அரசனும் அவன் அமராவதியை மணம்புரியச் சம்மதம் அளிப்பதாக ஒப்புக்கொண்டதையும் கூறியபோது அவன் மனதிற்குச் சற்று ஆறுதல் உண்டாகியது.

ஆயினும் அவன் மனம் சாந்தமடைந்து அவன் பேசத்தொடங்கச் சற்று நேரம் பிடித்தது. ஏனெனில் அவன் அம்மான் விஷயத்தில் அவனுக்கு நன்றியோடு நடந்து கொள்ளவே விருப்பம். ஆனல் இப்போது அவர் அமராவதி விஷயத்தில் நடந்து கொண்டமாதிரியால் அவர் விஷயத்தில் அவனுக்குப் பூரண வெறுப்புண்டாய் விட்டது. அரசன் விஷயத்திலோ இன்னும் அதிக வெறுப்பும் கோபமுமுண்டாய்விட்டன. ஆகையால் அவன் ஜனரல் உக்கிரசேனரை நோக்கி "விஷயங்கள் இவ்வாறு நடந்த வரையில் இனி நான் இந்த இராணுவ உடையை யணிந்திருப்பது தகுதியாக எனக்குத்தோன்றவில்லை. ஏற்கனவே நான் கொண்டிருந்த உத்தேசம், இப்போது தாங்கள் கூறிய விஷயங்களால் உறுதிப்படுகிறது. இத்தகைய அரசனிடம் சேவகம் செய்வது

யோக்கியதையாக எனக்குப் புலப்படவில்லை. ஆகையால் நான் என் வேலையை இராஜிநாமா கொடுத்துவிடத் தீர்மானிக்கிறேன்." என்றான்.

ஜனரல் "ஆம். சந்தர்ப்பங்கள் அவ்வாறு செய்யும்படி உன்னைப் பலவந்தப்படுத்துகின்றன வென்பது உண்மையே. உன்னுடைய கம்பீரமான மன உறுதியை நான்மெச்சிக் கொள்ளுகிறேன்" என்றார்.

உலகநாயகன்.—இனி என் அம்மான் விஷயத்தில் இவ்வளவு தூரம் நடந்தபின், இன்னும் அவருடைய ஆதரவின் கீழிருக்க எனக்கு விருப்பமில்லை. அவருடைய மாளிகைக்கு ஒரு முறைமட்டுமே செல்வேன். அந்த ஒரு முறையும் நாளைக்குச்சென்று என் அத்தையைப் பார்த்துவிட்டு வருவதற்காக. அதன் பின் அங்கு அடியெடுத்தே வைக்கமாட்டேன். அவருடைய சொத்தில் ஒரு காசுகூட நான் தீண்டவுமாட்டேன்" என்றான்.

ஜனரல் உக்கிரசேனர், "உன் அத்தை யின்றைக்கே புறப்பட்டுப் பாஞ்சால நாட்டிற்கு செல்வதால் நீ காண முடியாது. மேலும் அந்தம்மாள் முன்னமே மிக்க மனோவியாதியை யனுபவித்திருக்கிறார்கள். நீ அந்தம்மாளை யிப்போது கண்டால் நடந்த விஷயங்களெல்லாம் அவர்கள் நினைவிற்குவந்து அவர்களுக்கு மிக்க மனோ வருத்தத்தையே யுண்டாக்கும். அதனால் நீ போய்க் காணாமலிருப்பதே நலம்" என்றார்.

உலகநாயகன் " அப்படியே செய்கிறேன். தாங்கள் எனக்கும் என்னோடு சம்பந்தப் பட்டவர்களுக்கும் செய்திருக்கும் உபகாரங்கள் அபூர்வமும் அபாரமுமானவை. தங்களுக்கு என் விஷயத்திலுண்டாயிருக்கும் புத்திர

வாஞ்சையினும் மேலான அன்பும் அத்தகையதே. ஆகையால் எத்தகைய விஷயத்திலும் தங்கள் புத்திமதிப்படிக்கும் பிரியப்படிக்குமே நான் எப்போதும் நடந்துகொள்வேன் என்பது நிச்சயம்" என்ருன்.

ஜனரல் உக்கிரசேனர்.—"நண்பனே! உன் உத்தியோகத்தைப்பற்றியும் உன் மாமன் விஷயத்தைப் பற்றியும் நீ செய்துகொண்ட தீர்மானங்களைப்பற்றி நான் உன்னை மிகவும் புகழ்ந்து கொள்ளுகிறேன். அது உன்னுடைய பெருந்தன்மையையும், நேர்மையான நடக்கையையும், வீரத்தன்மையையும், சுயாதீனப் பிரியத்தையும் நன்கு விளக்குகிறது. அதோடு நீ என் புத்திமதியை யேற்றுக்கொள்வதாய்க் கூறிய வாக்குத்தத்தத்தைப் பற்றி நான் மிக்க சந்தோஷமடைகிறேன். நீ அவ்வாக்குத் தத்தப்படி நடக்கப் பின்னிடையமாட்டா யென்று பூரணமாக நம்புவதோடு இப்போதே அதைச் சோதிக்கப்போகிறேன்.

இப்போது நீ உன் வேலையை விட்டு விடப்போகிருய். அதனல் உனக்கு வரும்படியில்லாமற் போகிறது. உன் அம்மானிடம் எவ்வித உதவியும் பெறமாட்டேனென்று கூறிவிட்டாய். உன் மனைவி மூலமாக ஏதேனும் பொருள் பெறுவாய் என்று எதிர்பார்ப்பதற் கில்லை. அதோடு கலியாணம் செய்துகொண்டே தீரவேண்டும். இனி அதை நிறைவேற்றியே தீரவேண்டும். ஆகையால் உன் க்ஷேமத்தைக் கவனிக்கவேண்டியது என்பொறுப்பு. இரு, ஒன்றும் கூருதே. எனக்குத் திரண்டசெல்வம் இருக்கிறது. ஒரு மாளிகையுமிருக்கிறது. நான் மேற்கு நாட்டிற்குச் செல்லப்போகிறேன். இவற்றை யொப்பித்து

விட்டுச்செல்ல உன்னைவிட நம்பகமான நண்பர் எனக்கு வேறு யாருமில்லை. நான் உன்னைக் குழந்தைப் பருவத்திலிருந்து அறிவேனென்றும் உன்மேல் மிக்க அன்பு கொண்டிருக்கிறேனென்றும் முன்னமே கூறி யிருக்கிறேன். இப்போது என் ஆஸ்தியையும் மாளிகையையும் உன் சுயாதீனத்தில் விட்டுச்செல்லப் போகிறேன். நீயும் உன்மனைவியும் மணம் செய்துகொண்டதே நேராய் அங்கு செல்லவேண்டும். நான் திரும்பி வரும் வரையில் என் ஆஸ்தியில் வரும் வருமான முழுமையும் நீ யனுபவித்து வரவேண்டும்... உஸ் ஒரு வார்த்தையும் கூற வேண்டாம்.

இனி நாம் உட்கார்ந்து உன் இராஜினமாவை எழுதுவோம். அதை நானே எடுத்துக்கொண்டு நகரத்திற்குச் சென்று அதைக்கொடுக்க வேண்டிய விடத்தில் கொடுத்து நாளைக்கே அது அதிகாரிகளால் அங்கீகரிக்கப் படும்படி செய்கிறேன். அதைப்பற்றி யுனக்கொரு கவலையும் வேண்டாம். நாளைக்கே நீ எங்கு செல்லவும் சுயாதீனமடைந்து தாராளமாய் உன் காதலியைப் போய்க் காணலாம்" என்றார்.

---

## 30-வது அத்தியாயம்

மதனும்பாள் சீமாட்டியும் குமுதவல்லியும்—
சக்களத்திப்போர்—மதனும்பாளின் கள்ளச்செயல்—
ஜனரல் உக்ரசேனரும் அரசரும்—ஜனரலுக்குப்
புது உத்தியோகம்—உலகநாயகன் கலியாண ஏற்பாடு—
தையலாயகிச் சீமாட்டி-மதனும்பாள் சீமாட்டி கர்னல்
குமரவேலோடு சேர்ந்து செய்யும் சதியாலோசனை.

---

முன் அத்தியாயத்தில் கூறப்பட்ட சம்பவங்கள் நேர்ந்தசரியாக ஒருமாதமாயிற்று. ஒருநாள் பிற்பகல் சுமார் இரண்டுமணிக்கு மதனும்பாள் சீமாட்டி தன் அறையில் தனியாக உட்கார்ந்து முகவாட்டத்தோடு ஏதோ சிந்தனையிலிருக்கிருள். காரணமென்னவெனில் தன் விரோதியும் அரசனுடைய மற்ருெரு காதலியுமாகிய குமுதவல்லிச் சீமாட்டி யென்பவள் சில வாரங்களாக அரசனை அதிகமாய்க் கைவசப்படுத்திக்கொண்டு அதிக செல்வாக்கடைந்து வருகிருள் என்று அறியலானுள். அவள் மூலமாக அரசனிடம் பட்டங்களும் ஜாகீர்கள் முதலிய வரும்படிகளும் பெற்றவர்களும் பெறக்கூடியவர்களுமாகிய சிலர் அவள் கட்சியைச் சேர்ந்தவர்கள். மதனும்பாள் சீமாட்டி செல்வாக்குக்கு வந்தது முதல் இக்கட்சியாருக்கு மனவருத்தமே. ஆதலால் இவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு பெருந்தொகை சேகரம் செய்து அச்சீமாட்டிக் களித்தார்கள். மிதமிஞ்சிய செலவையுடைய அரசனுக்கு அச்சீமாட்டி அப்போதைக் கப்போது பணம் கொடுத்து மறுபடி தன் வயப்படுத்திக் கொண்டாள். இச்சங்கதிகளோடு தற்சமயம் சிலருக்குப்

பட்டங்கள் ஜாகீர் முதலியவைகள் அரசன் கொடுக்க உத்தேசித்திருப்பதாகவும்,அவர்களுடைய பெயர்களெல்லாம் ஒரு பட்டியில் எழுதப் பட்டிருக்கின்றனவென்றும் மதனம்பாள் சீமாட்டி எவ்வாறோ அறிந்துகொண்டாள். ஆகையால் தன் பழைய நிலைமையை அடையவும், தன் போட்டிக்காரியாகிய குமுதவல்லிச் சீமாட்டியின் செல்வாக்கையழித்துவிடவும் என்ன செய்யலாம் என்பதே இப்போது அவளுடைய ஆழ்ந்த ஆலோசனை.

அவள் நெடுநேரம் ஆலோசனை செய்து கடைசியில் தன் மனதில் திடீலென்று ஏதோ யோசனையுதிக்கவே அவள் முகம் சற்றுமலர்ந்தது. உடனே எதிரில் மேஜை மேலிருந்த வெள்ளிமணியை யடித்தாள். ஒரு தோழி தக்ஷணம் உள்ளே வந்தாள். சீமாட்டி அவளை நோக்கி "ஆ! இன்றுதானே ஜனரல் உக்கிரசேனருக்கு மேற்கு நாட்டின் கவர்னர் ஜனரல் பதவிக்கு வேண்டிய சன்னது பிருதுகள் யாவும் அளிக்கப்பட ஏற்பாடாகி யிருப்பது? அதுவும் இந்த வேளைதானென்று நினைக்கிறேன்" என்றாள்.

தோழி.—ஆம் அம்மா! இப்போதுதான் அரசன் மந்திராலோசனை சபைக்குள் பிரவேசித்தார். ஜனரல் உக்கிரசேனரும் அவர் தனக்காக அமர்த்திக் கொண்ட உத்தியோகஸ்தர்களும் இப்போதுதான் வந்து சபைக்குள் செல்வதைக் கண்டேன்" என்றாள்.

சீமாட்டி "சரி சரி; அவர்கள் சடங்குமுடிய ஒரு மணி நேரமாவது செல்லும்; நீ போகலாம்" என்றதே தோழி வெளியிற் சென்றாள்.

தோழி சென்றதே மதனம்பாள் தன் பெட்டியைத்

திறந்து ஒரு கொத்துச் சாவியை யெடுத்துக்கொண்டு அறையைவிட்டுப் புறப்பட்டுத் தாழ்வாரத்தின் வழியே சென்று, சற்று தூரத்திலிருந்த இன்னொரு அறைக்குள் நுழைந்து, அங்கிருந்த கள்ளக்கதவைத் திறந்து உள் நுழைந்து படிகளின் வழியாயேறிக் கடைசியில் மிக்க அழகாக அலங்காரம் செய்யப்பட்டிருந்த ஒரு அறைக்குள் பிரவேசித்தாள்.

அந்த அறை அரசனுடைய இரகசிய அறை. அங்குதான் அரசன் தன் இரகசியக் கடிதங்கள், தன் காதலிகளின் சம்பந்தமான கடிதங்கள், இன்னும் அன்னியர் காணத் தான் விரும்பாத கடிதங்கள் முதலியயாவும் வைத்து வைப்பது. யாரோடாயினும் இரகசியமாகச் சம்பாஷிக்கவேண்டி யிருப்பின் அங்குதான் சம்பாஷிப்பது. சீமாட்டி யதற்குள் நுழைந்து கதவை உட்பக்கமிருந்தபடி தன்னிடமிருந்த சாவியால் பூட்டிக்கொண்டு அங்கிருந்த மேஜைமே லுள்ள கடிதங்களை யெல்லாம் பார்த்தாள். அரசன் பட்டம் முதலியவை யளிப்பதற்குக் குமுதவல்லிச் சீமாட்டி யார் யாரைச் சிபாரிசு செய்திருக்கிறுள் என்பதையறிந்தால் அவள் கட்சியில் இப்போது யாரார் சேர்ந்து வேலை செய்கிறுர்களென்று தெரிந்துகொள்ளலாம். அதன் மேல் அவள் செல்வாக்கை யொழிக்கத் தக்கபடி முயற்சி செய்யலாமென்பதே மதனும்பாள் கருத்து. அதனல் அவர்கள் பெயர் எழுதப்பட்ட பட்டியைத் தேடவே அங்கு வந்தாள். மேஜைமேல் அது இல்லை. பிறகு அங்கிருந்த பீரோக்கள் பெட்டிகள் அலமாரிகள் யாவும் ஒவ்வொன்றுய்த் தன் சாவிகளால் திறந்து பார்த்தாள். முதலில் ஒன்றைத்திறக்கச் சரியான சாவி கிடைக்கவேண்டும். ஒவ்

வொரு சாவியாலும் முயற்சிசெய்து பார்க்கவேண்டும். பிறகு உள்ளிருக்கும் கடிதங்களைச் சோதிக்கவேண்டும். தெய்வசங்கல்பமாகக் கடைசி பெட்டியில்தான் இவள் தேடும் ஜாப்தா அகப்பட்டது. ஆகையால் காலதாமத மாய் விட்டது. அவள் அப்பட்டியிலுள்ள பெயர்களை யெல்லாம் பார்த்து அவற்றை மனதில் வைத்துக்கொண் டாள். கர்னல் குமரவேல் பெயரும் அதிலிருந்தது. கடை சியில் அப் பெட்டியை மூடிவிட்டு அவள் திரும்பப் போகும் சமயம் அரசனும் இன்னொருவரும் பேசிக் கொண்டே அறையை நோக்கி வரும் சத்தம் கேட்டது. இப்போதென்ன செய்வது? பெரிய ஆபத்தாய் முடியும். நாற்புறங்களிலும் சுற்றிப்பார்த்தாள். அரசனுடைய இரா ணுவ உடைகள் வைக்கப்பட்டிருக்கும் உயரமான பீரோ ஒன்று ஒரு மூலையிலிருந்தது. அதன்முன் விடப் பட்டிருந்த தடித்த திரை அடி வரையில் தொங்கிக்கொண் டிருந்தது. மதனம்பாள் சட்டென்று அத்திரையின் பின் மறைந்து கொண்டாள்.

மறுநிமிடம் அறையின் வெளிப்பக்க மிருந்து கதவு திறக்கப்பட்டதும் அரசனும் ஜனரல் உக்கிரசேனரும் அறைக்குள் வந்தார்கள். அத்தகைய கதவுகளிலுள்ள பூட்டுகள் கதவில் தைக்கப்பட்டவை. இருபுறங்களிலிருந் தும் பூட்டவும் திறக்கவும் கூடும். இருவரும் உள்ளே வந் ததும் ஆசனங்களிலமர்ந்த பிறகு பின்காணும் சம்பா ஷணை நடந்தது.

அரசன்.—ஜனரல்! நீர் செய்துகொடுத்த சத்தியமான வாக்குத்தத்தப்படி அந்த நாட்டை என் அரசாட் சியிலிருந்து பிரித்துவிட முயலவேண்டாம் என்று நான் மறுபடி கூறினால் உம்மை யவமரியாதைசெய்வ தாகும்.

ஜனரல்:—அரசே அப்படிக்கில்லாவிடினும் அது முதலாவது அனுவசியம். நான் அப்படியே நடப்பதாக எனக்குள் நிச்சயித்துக்கொள்ளாவிட்டால் அந்த வாக்குறுதியை யளித்திருக்கமாட்டேன். அப்படித் தக்களுக்குக் கொஞ்சமேனும் அய்யமுண்டேல் உடனே இராஜிநாமா அளித்து விடுகிறேன்.

அரசன்:—“இல்லையில்லை. அப்படியில்லை. நீர் சத்தியவானென்று நன்கறிவேன். அப்படிக்கின்றேல் இது நடந்திராது. தங்களையும் தங்கள் பரிவாரத்தையும் மேற்கு நாட்டிற் கொண்டுபோய்ச்சேர்ப்பதற்காக ஒரு கப்பல் ஆயத்தமாய்த் துறைமுகத்தில் காத்துக் கொண் டிருக்கிறது. தாங்கள் எப்போது செல்ல உத்தேசித்திருக்கிறீர்கள் ?” என்றான்.

அரசனுக்கு ஜனரல் உக்கிரசேனர் விஷயத்தில் மிக்க பீதியே. ஏனெனில் தான் குடிகளுக்குத்திருப்தியாய் நடக்காதவனாகவும், அநீத நடக்கைகளை யுடையவனாகவுமிருப்பதாலும், ஜனரல் உக்கிரசேனரை யாவரும் பெருந்தன்மை யுடையவராகவும் நீதி தவறாத சத்தியவானாகவும் மகிழ்ந்து புகழ்வதாலும் அவர் சுலபமாகவே ஜனங்களை யரசனுக்கு விரோதமாய்க் கிளப்பிவிடலாம். ஆகையால் அவர் சீக்கிரம் நாட்டை விட்டுப் போய்விட வேண்டு மென்பது அரசன் ஆவல். அவன் கேட்டதற்கு ஜனரல், “நான் நாளை யிங்கிருந்து மறுநாள் மாலை புறப்படப்போகிறேன்” என்றார்.

அரசன்:—என் நாளைக்கே புறப்பட்டாலென்ன ?

ஜனரல்:—இல்லை; நாளைக்கு இங்கு ஒருவேலையிருக்கிறது.

அரசன்:—சரி. அப்படியே செய்யும். அந்த உலகநாயகன்

இன்னும் அப்பெண்ணையே மணம்புரியக்கருதி யிருக்கிருனே. என் வரையில் அன்று சுகவிலாசத்தில் நடந்த அக்குழப்பத்திற்குப் பின் இனி அந்த விஷயத்தில் தலையிடுவதேயில்லை யென்று தீர்மானம் செய்துகொண்டேன்.

ஜனரல்:—நான் அரசரிடம் எதையும் மறைக்கவேண்டிய காரணமேயில்லை. உண்மையென்னவெனில் நாளை உலகநாயகனுக்கும் அக்கன்னிகைக்கும் திருமணம் நடக்க நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. நானும் அருகிலிருந்து நடத்திவிட்டுச் செல்வதாய் வாக்களித்துவிட்டேன். அதற்காகவே நாளை யிங்கு தங்கியிருந்து மறுநாள் பிரயாணம் செய்வதாகக்கூறினேன். தாங்கள் ஒரு இடையூறும் கருதமாட்டீர்களென்று நம்புகிறேன்.

அரசன்:—ஆ! ஜனரல்! தாங்கள் சம்பந்தப்பட்டிருக்கும் விஷயங்களில் தலை யிட்டு எனக்குப்போதுமென்ருய் விட்டது. நான் இதிற் றலையிடவில்லை யென்று விளங்குகிறதல்லவா. இனி உலகநாயகனுக்கும் பஞ்சநாதம் பிரபுவுக்கு முள்ள சம்பந்தம் இப்போதெப்படி யிருக்கிறது?

ஜனரல்:—அரசே! அப்பிரபு தங்கள் கட்டளைப்படி அவனைப்பூரணமாக மன்னித்து விட்டதாகவும், தன் ஆஸ்திமுழுமைக்கும் அவனையே சுதந்திரக்காரனுக நியமிப்பதாகவும், நடந்த விஷயங்களை யெல்லாம் மறந்து விடவேண்டியதென்றும் அவனுக்குக் கடித மூலமாகத்தெரிவித்தார்.

அரசன்:—ஆ! உலகநாயகன் அதற்குத்தக்கபடி பதில் வரைந்தாை அல்லது நேரில் சென்று கண்டானு?

ஜனரல்:—அவன் அப்படியொன்றுமே செய்யவில்லை. அவர் தனக்கு இதுகாறும் செய்த நன்மைகளுக்கெல்லாம் அவருக்கு மிக்க நன்றியோடு வந்தனமளிப்பதாகவும், அந்நன்றியைத் தான் ஒருபோதும் மறக்க முடியாதென்றும், ஆயினும் தனக்கு எவ்வளவோ மனவருத்தமாயினும் நடந்த சம்பவங்களால் இனி அவரிடம் எவ்வளவு உதவியும் பெறத் தனக்கு மனம் இசையவில்லையென்றும் தெரிவித்துவிட்டான். என் அங்கீகாரத்தையும் பெற்றே அவ்வாறு செய்தான்.

அரசன்:—"ஆகா! என்ன துணிகரமான தீர்மானம்! மிக்க உறுதியான மனம்" என்றான்.

அவ்வாறு கூறும்போது அரசன் முகத்தில் ஒரு விதப்பிரகாசமும் மனதில் ஒருவித மகிழ்ச்சியும் பெருமையும் தோன்றியன. எனினும் அது ஒரு நிமிடமாத்திரமே யிருந்தது. மறுநிமிடமே கடுகடுப்பும் வெறுப்பும் தோன்றின. ஆயினும் ஜனரல் உக்கிரசேனர் மட்டும் அதையுணர்ந்ததோடு அதன் காரணத்தையும் அறிந்துகொண்டு, "அரசே! நடந்திருக்கும் விஷயங்களால் அவன் வேறு வழியாய் நடப்பதற் கில்லை. சுகவிலாசத்தில் நடந்த சம்பவங்களாலேயே அவன் வேலையையும் விடநேர்ந்தது. ஆனால் அதற்கு இன்னொரு காரணமுமுண்டு.

அரசன்:—என்ன காரணம்?

ஜனரல்:—அமராவதியை இருமுறை கர்னல் குமரவேல் அவமரியாதையாக நடத்தியிருக்கிறான். இப்போது அவளை மணம் புரிந்துகொண்டபின் உலகநாயகன் அச்சைனியத்திலேயே தன் மனைவியோடு வசிப்பதெனில் அது தகாத நடக்கையே. அதனால் பின்னால் தொந்திரவுகள் நேரவுங்கூடும்.

அரசன்:—சரி. கலியாணம் எங்கே, எப்போது நடக்கப் போகிறது? அதன் விவரமான ஏற்பாடென்ன? நான் அறியலாகுமல்லவா?

ஜனரல்:—ஆகா தடையின்றிக் கூறுகிறேன். இரொட்டிக் கிடங்கிற்கு இரண்டுமயில் தூரத்தில் தச்சூர் என்ற கிராமமிருக்கிறது. சரியாய் நாளைக்காலை பத்தரை மணிக்கு இரொட்டிக்கிடங்கிலிருந்து யாவரும் புறப் பட்டுத் தச்சூர்க் கோயிலுக்குச்செல்லல். பதினொரு மணிக்குத் திருமணச்சடங்கு நடைபெறும். பிறகு அங்கிருந்து திரும்பி மணமகள் வீட்டிற்குச்செல்லல். அங்கு விருந்து நடைபெறும். மாலை இரண்டரை மணிக்குக் கூட்டம் கலைந்து விடும். அப்போதே பெண்ணும் பிள்ளையும் அங்கிருந்து புறப்பட்டு இல வணபுரிக்கு வந்து விடுவார்கள். இதுதான் ஏற்பாடு.

அரசன்:—சரி. உலகநாயகன் தன் வேலையை விட்டு விட் டான். மாமனிடமும் ஒரு காசும் வேண்டாமென்று மறுத்து விட்டான். எனக்குத் தெரிந்தவரையில் அவன் மாமனர் தன் மகளுக்கு ஒரு சீதனமுமளிக் கக்கூடிய நிலைமையிலில்லை யென்றே நினைக்க வேண்டி யிருக்கிறது. கடைசியில் தன்னைப் பிச்சைக் காரனுக்கிக்கொண்டான்.

ஜனரல்:—அரசே! இயற்கை விதிப்படி அவனுக்கு எங் கிருந்து செல்வம் வரவேண்டுமோ அங்கிருந்து ஒரு உதவியும் கிடைக்காவிடினும், அத்தகைய கம்பீர மும், சத்தியமும், வீரத்தனமும் நீதி நெறியுமுடை யவனைக் கடவுள் பிச்சைக்காரனுக்கமாட்டார். உலக நாயகன் பிச்சைக்காரனுய் விடவில்லை. அவனுக்குப்

பூரண வுதவிசெய்ய ஆண்டவன் ஒரு சிநேகனை யளித்தே யிருக்கிறான்.

அரசன்:—"அந்த உதாரகுணமுள்ள நண்பர் தாங்களே யென்று தெரிந்து கொண்டேன். சரி இனித் தாங்கள் நாளைக்குக் கலியாணத்தை நடத்திவிட்டு அடுத்த நாள் புறப்படுவது நிச்சயமென்று நினைக்கிறேன். இன்னும் உங்களுக்குப் பல வேலைகளிருக்கும். நமது சம்பாஷணை முடிந்தது" என்றான்.

ஜனரல் உக்கிரசேனர் உடனே விடை பெற்றுக் கொண்டு சென்றார். அரசனும் உடனே அறையைவிட்டு வெளிப்பட்டான். நடந்த சம்பாஷணை யாவும் கேட்டுக் கொண்டிருந்த மதனம்பாள் சீமாட்டி "அப்பா! தப்பினேம்" என்று மெதுவாய்த் தன் அறைக்குச் சென்றாள்.

இனிமேல் நடக்கும் சம்பவங்கள் நன்கு விளங்கு நிமித்தம் இரண்டொரு விஷயங்களைப்பற்றி இங்கு கூற வேண்டியது அவசியமாகிறது. அவற்றைக் கூறிவிட்டு நமதுகதையைப் பின்பற்றிச் செல்வாம்.

இரொட்டிக் கிடங்கிற்குக் கிழக்கில் நான்கு மைல் தூரத்தில் வாணிவிலாஸ் என்ற மாளிகை யொன்றிருக்கிறது. அதன் சொந்தக்காரி தையநாயகி என்ற சீமாட்டி. அவள் கணவனாகிய சீமா னிறந்துபோய்ச் சில வருடங்களாயின. அவளுக்குச் சந்ததியில்லை. ஆயினும் அவள் தக்க ஆடம்பரத்தோடேயே அங்கு வசித்து வருகிறாள். அவள் மதனம்பாளின் தங்கையாகிய அம்புஜாக்ஷியின் கணவனுக்கு அத்தை. ஆனால் அவனுடைய முரட்டுக் குணத்தாலும் அவன் தன் மனைவியைக் காரண மின்றி மிக்க கொடுமையாக நடத்துவதாலும் அவளுக்கு அவன் மேல் சற்றும் விருப்பில்லை. ஆனால் அவள் அம்புஜாக்ஷி

மேல் மட்டும் மிக்க பட்சமுடையவள். அதனால் அம்பு ஜாட்சி அப்போதைக்கப்போது அங்குவந்து இரண்டொருநாள் இருந்து செல்வதுண்டு. தனக்குப்பின் தன் ஆஸ்தியை யம்புஜாட்சிக்கே யளிக்கப்போவதாகவும் அவள் கூறியிருக்கிறாள்.

அவள் தன்வரையில் அகங்காரமும் பெருமையுமுடையவளாயினும் நல்லநெறி யுடைவள். ஆனால் அரசன் சின்னக் கட்சியைப்பிடிவாதமாகப்பற்றியிருப்பவள். அரசன் எது செய்தாலும் குடிகள் அதைக் குற்றமெனக் கூறலாகாது என்ற தீர்மானமுடையவள். ஆகையால் அரசனது காதலிகளிடம் அவளுக்கு வெறுப்பு கிடையாது. அவர்களைப் பெருமையாகவே உபசரித்து நடத்தும் குணமுடையவள். அவள் "நான் உன் தமக்கையைக் காண விரும்புகிறேன்" என்று அம்புஜாட்சியிடம் கூறியிருந்ததால் மதனும்பாள் இரண்டொரு முறை யவள் மாளிகைக்குச் சென்றிருக்கிறாள். அவ்வாறு ஒரு நாள் சென்றிருந்தபோதுதான் அங்கிருந்து சுமார் மூன்றுமைல் தூரத்திலுள்ள எட்டிக்குடிக்குச்சென்று உலகநாயகனைக் கண்டாள். ஆனால் அவன்மேல் கொண்ட காதலால் அவனுக்காகவே இலவண புரியிலிருந்து அவ்வளவு தூரம் வந்து மிக்க களைப்படைந்தவள்போல் பாசாங்கு செய்து நடித்தாள். இனி நமது கதையைப் பின் பற்றுவாம்.

அரசன் அறையை விட்டுத் தன் அறைக்கு வந்த மதனும்பாள், உடனே ஒரு தோழியை யழைத்து "நான் கால் மணிக்குள் வாணி விலாசத்துக்குப் புறப்படவேண்டும். உடனே வண்டியை ஆயத்தம் செய்யும்படி கூறு" என்று கட்டளையிட்டு விட்டு, வேறு கம்பீரமான ஆடையாபாரணங்களை யணிந்து கொண்டு பிரயாணத்திற்கு

ஆயத்தமானள். அவள் நினைத்தபோது அவ்வாறு அரசன் அனுமதியின்றியே எங்கு வேண்டுமாயினும் சென்று சில நாட்கள் தங்கியிருந்து வரும் சுயாதீன நடக்கையுடையவள். ஆயினும் இப்போது தான் தையநாயகிச் சீமாட்டியைக் காணப் போவதாக ஒரு கடித மெழுதி அதை அரசனுக்கு அளிக்கும்படித் தன் ஆளிடம் கூறி விட்டு இரண்டு தோழிகளை மட்டும் கூட அழைத்துக் கொண்டு சுமார் நான்கு மணிக்குப் புறப்பட்டாள்.

அரண்மனையிலிருந்து வாணிவிலாசம் கிட்டத்தட்ட இருபதுமைல் இருக்கும். ஆகையால் மதனம்பாள் அங்கு போய்ச் சேரும்போது இரவு எட்டுமணியாயிற்று. தையநாயகிச் சீமாட்டி மிக்க அன்போடு அவளை வரவேற்று உபசரித்தாள். மதனம்பாள் மிக்க தந்திர சாமர்த்தியமாக அம்மூதாட்டியைத் தன் பிரியப்படி செய்யும்படி வசியப்படுத்துவது ஒரு பெரிய காரியமல்ல. ஆகையால் மூதாட்டியை நோக்கி "நான் எட்டிக்குடியிலுள்ள கர்னல் குமரவேல் என்பவனை ஒரு முக்கிய விஷயமாகக் கண்டுபேச வேண்டும். ஆகையால் அவனை நாளைக் காலைப் போசனத்திற்கு இங்கு வரும்படி நீயே எழுதுவதுபோல் ஒரு அழைப்புச் சீட்டு எழுதவேண்டும்" என்றாள்.

அம்மூதாட்டி அவ்வாறே எழுதினள். மதனம்பாள் அவள் எழுதும்போது அருகிலிருந்து "நம்மை விருந்துண்ணமட்டுமல்ல அழைப்பது ஏதோ ஒரு விசேஷ விஷயம் இருக்கிறது" என்று கர்னல் குமரவேலின் மனதிற்குப் புலப்படும்படி தந்திரமாக எழுதும்படிச் செய்தாள். கடிதம் எழுதிமுடிந்ததும் உடனே அதையொரு ஆளிடம் எட்டிக்குடிக்கு அப்போதே யனுப்பினள்.

அம்மனிதன் சென்று கடிதத்தைக் கர்னலிடம் அளித்து விட்டு அவனிடமிருந்து பதில் வாங்கிக்கொண்டுவந்தான். பதில் கடிதத்தில் கர்னல் அவசியம் காலைப்போசனத்திற்கு வருவதாக எழுதியிருந்தான்.

மறுநாள் காலை எட்டு மணிக்குக் கர்னல் குமரவேல் வாணிவிலாசத்திற்கு வந்தான். மதனும்பாள் செய்த தந்திரப்படியே தன்னையழைப்பது விருந்துண்ணமட்டும் மல்ல, ஏதோ வேறு விசேஷம் இருக்கிறதென்றே அவன் மனதிற்குப் புலப்பட்டது. ஆனால் அங்கு வந்ததும் மதனும்பாள் சீமாட்டியைக் கண்டதே அவனுக்கு மிக்க வியப்பும் மனக்கலக்கமு முண்டாகி விட்டன. ஏனெனில் அவன் குமுதவல்லிச் சீமாட்டியின் கட்சியில் இப்போது சேர்ந்திருப்பதால் அச்சங்கதி தெரிந்தே மதனும்பாளே தந்திரமாகத் தன்னை யிங்கு வரவழைத்தாளென்று எண்ணிக்கொண்டான். அதனால் அவனுக்குக் கலவரமுண்டாயிற்று. பிறகு சீமாட்டி தன்னிடம் சாதாரணமாகப் பேசத்தொடங்கிய பின் அக்கலவரம் நீங்கியது. ஆனால் அயோக்கியனுடைய சிந்தனையின் சுபாவப்படி அவன் கெட்ட எண்ணமேகொண்டான். அதாவது மதனும்பாள் சீமாட்டி தன்மேற் காதல்கொண்டுதான் தன்னை வரவழைக்கும்படி இவ்வாறு ஏற்பாடு செய்தாள் என்று கருதி மனதில் பெருமை கொண்டான்.

போசனம் நடந்த பிறகு மதனும்பாள் சீமாட்டி கர்னல் குமரவேலை நோக்கி நான் உம்மோடு ஒரு விஷயத்தைப்பற்றிச் சம்பாஷிக்கவேண்டும்" என்று கூறி அருகிலிருந்த ஒரு அறைக்கு அழைத்துச்சென்றாள்.

இருவரும் அறையில்உட்கார்ந்ததும் மதனும்பாள் அந்த அறையின் கதவை நன்றாய்த் திறந்து விட்டாள்.

ஏனெனில் கர்னலின் யோக்கியதை அச் சீமாட்டிக்குத் தெரியும். ஆதலின் அவன் பின்னால் தன்னைப்பற்றி அகௌரவமான சங்கதியெதையும் பிரஸ்தாபிக்க இடம் அளிக்கலாகாதென்றே அப்படிச்செய்தாள். இதைக்கண்டதே கர்னல் குமரவேல் தான் எண்ணியது தவறு என்று அறிந்துகொண்டான். அவன் மனம் சோர்ந்து விட்டது.

சீமாட்டி "கர்னல்! சில விஷயங்கள் என் செவிக்கு எட்டியிருக்கின்றன. அவற்றால் நம்மிருவருக்கும் அனுகூலமுண்டாகுமென்று கருதுகிறேன். உனக்கு நான் கூறுவது வியப்பாக விருக்கிறது. கொஞ்சக்காலத்திற்கு முன் உலகநாயகன் நீர் காதலித்த பெண் விஷயமாக உமக்கு அகௌரவம் உண்டாகச் செய்தானல்லவா?" என்றாள்.

இம்மொழிகளைக் கேட்ட கர்னல் ஒன்றும் அறியமுடியாமல் விழித்தான். சீமாட்டி "நான் கூறுவதைக்கேளும். இப்போது அதிகமாகப்பேச அவகாசமில்லை. நான் கேட்பதற்கு விடையளியும். இப்போது உமது காதலும் வஞ்சமும் இரண்டும் ஏககாலத்தில் நிறைவேறக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தால் உடனே அவற்றை நிறைவேற்றிக்கொள்ள முயல்வீரா?" என்றாள்.

கர்னல்:—"சீமாட்டியே! தாங்கள் எனக்கு விளங்கும்படி சங்கதியைக்கூறினால் நான் மனப்பூர்வமான விடையளிக்கச் சித்தமாக விருக்கிறேன்" என்றான்.

சீமாட்டி:—கொஞ்சம் கஷ்டம் எடுத்துக்கொள்வதால் அமராவதி யென்கிற அப்பெண்ணைக் கைப்பற்றக் கூடுமானால் அதை யுடனே செய்வீரா.

கர்னல்:—ஆகா. செய்வேன்.

சீமாட்டி:—அதே சமயத்தில் உலகநாயகன் மேலும் வஞ்சந் தீர்த்துக் கொள்வீரா?

கர்னல்:—"சீமாட்டியே! அது யோசிக்கத்தக்க விஷயம். ஏனெனில், முதலாவது அவன் அம்மானுகிய பஞ்சநாதம் பிரபுவுக்கு நான் பெருந்தொகை கடன் கொடுக்கவேண்டும். அதைப்பற்றிப் பேச வரும்படி அவர் இன்று எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறுர். உலகநாயகனுக்கு என்னுல் ஏதேனும் கெடுதி நேர்ந்தால் அப்பிரபுவால் எனக்கு மிக்க ஆபத்து நேரும். இரண்டாவது, அவ்வாலிபன் விஷயத்தில் அரசர் மிக்க அன்பு பாராட்டுகிறுர். அவன் விஷயத்தில் சினேக பாவமாக அன்போடு நடந்து கொள்ளும்படி முன்னம் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறுர். ஆகையால் அவனுக்கு நான் தீங்கு செய்யின் அரசன் கோபத்திற்கும் ஆளாவேன். என்றுன்.

சீமாட்டி:—நீர் அப்பிரபுவுக்கு அஞ்சவேண்டிய காரணம் கொஞ்சமுமில்லே. ஏனெனில் உலகநாயகன் இப்போது பூரணமாய் அவர் அன்பை யிழந்து விட்டான். அவருக்கு இப்போது அவன் மேல் வெறுப்பே யன்றி வேறில்லே. அதோடு அவருக்கு நீர் கொடுக்க வேண்டிய தொகையை நான் உமக்களிக்கிறேன். இனி அரசரோ, இப்போது அவன் மேல் அன்புவைத்தில்லே. அவன் அப்பெண்ணை மணம்புரிவது அரசருக்குப் பிரியமேயில்லே. ஆகையால் அவர் மனதிற்குத் திருப்தி யுண்டாக்கவே நான் இவ்விஷயத்தில் தலையிட்டேன். இப்போது நீர் எவ்வாறேனும் அந்த உலகநாயகன் அப்பெண்ணை மணம்புரிய வொட்டாது செய்தால் அரசரின் அன்பையும் பெறுவீர்.

கர்னல்.—"சீமாட்டி! நான் தங்களுக்கு எவ்வாறு என்

நன்றியைக் காட்டுவதோ எனக்கு விளங்கவில்லை. இவ்வாறாயின் தாங்கள் கூறுகிறபடி நான் செய்யத் தடையேயில்லை...'' என்றதே.

சீமாட்டி.—நான் கூறுவதைக் கவனமாகக் கேளும். இந்த விஷயத்தில் நான் உம்மைப் பிரேரேபணை செய்ததாக அரசருக்குக்கூடத் தெரியலாகாது. அதற்காக அரசரிடம் பெறும் நன்மைமுழுதும் உம்முடையதாகவே யிருக்கட்டும். இப்போது நீர் இக்காரியத்தை முடிக்கும் மார்க்கத்தைக் கூறுகிறேன். உடனே நீர் வேலை செய்யவேண்டும். இன்று பதினொருமணிக்குத் தச்சூர்க் கோயிலில் உலகநாயகனுக்கும் அப்பெண்ணுக்கும் கலியாணம் நடக்கப்போகிறது. அச்சடங்கு முடிந்தபின் யாவரும் அங்கிருந்து இரொட்டிக்கிடங்குக்குச் சென்று விருந்துண்டபின் பிரிந்து அவரவர்கள் வளவிற்குச் செல்வார்கள். பிறகு இரண்டு மணிக்குமேல் மணமகள் மணமகன் இருவரும் இரொட்டிக் கிடங்கிலிருந்து இலவணபுரிக்குச் செல்கிறார்கள். அவர்கள் நகரம்போய்ச் சேரலாகாது. அதுதான் உமக்குத் தக்க சமயம்.

கர்னல்.—சீமாட்டியே! ஒருவன் மனைவியான பின் அப்பெண்ணைப் பிடித்துப் போவது பெரிய குற்றமாகுமே.

சீமாட்டி.—அவ்விஷயத்தில் உமக்கு ஏதேனும் தொந்திரை நேர்ந்தால் நான் இரகசியமாக உமக்கு வேண்டிய உதவியைச் செய்கிறேன். உமது சைனியத்தில் துணிகரமான ஆட்கள் ஐந்தாறு பேர் இல்லையா?

கர்னல்.—ஆகா இருக்கிறுர்கள். தங்கள் உதவியின் தைரியம் இருக்கும் வரையில் நான் இக்காரியத்தைச் சந்தோஷத்தோடு முடித்துக் கொள்வேன்.

சீமாட்டி.—அப்பெண்ணைப் பிடித்துக் கொண்டு போய் இரகசியமான ஒரு இடத்தில் உமக்குப்பிரியமான வரை வைப்பாட்டியாய் வைத்துக்கொண்டிரும். பிறகு உமக்குச் சலித்துவிடும்போது வெளியில் துரத்திவிடும்.

கர்னல்.—"ஆகா. இரகசியமான ஒரு இடமிருக்கிறது. முன்னமே அப்பெண்ணை யங்கு பிடித்துக்கொண்டு வரும்படிதான் ஏற்பாடு செய்தேன். இப்போது அந்த வீட்டுக்காரிக்கு முன்னுடி தெரிவித்து விட்டால் இடம் ஆயத்தமாக விருக்கும்.

பிறகு இருவரும் குசுகுசுவென்று சில வார்த்தைகள் பேசினுர்கள். அவை பின்னுல் நடக்கும் சம்பவத்தால் வெளியாகும்.

சீமாட்டி "வேளை நெருங்குகிறது. உடனே கடிதம் எழுதியொரு ஆளையனுப்பும். அதோ எழுதுகருவிகள்" என்று காகிதம் பேனு முதலியவை யிருக்கும் ஒரு மேஜையைக் காட்டினுள். கர்னல் குமரவேல் உடனே ஒரு கடிதம் எழுதித் தன் வேலைக்காரனை அப்பாசாமியிடமளித்து அவனை யனுப்பிவிட்டுத் தானும் உடனே சீமாட்டியிடம் விடைபெற்றுக் கொண்டு எட்டிக்குடிக்குப் புறப்பட்டான். அவன் மனதில் தன் காதலையும் வஞ்சத்தையும் ஏககாலத்தில் நிறைவேற்றிக்கொள்ளும் ஆவல் மட்டும் அச்சமயமிருந்ததே யன்றி அதனுல் எத்தகைய தீங்கு நேரிடக்கூடுமென்பது அம்மூடன் புத்தியிற்படவில்லை.

---

## 31-வது அத்தியாயம்.

கலியாணநாள்—மணமுடிந்தபின் தம்பதிகள் நகருக்குப் புறப்படுதல்—சதிக்காரன் துர்ச்செயல்—தம்பதிகளின் ஆபத்து—சமயத்தில் உதவி—ஜனரல் உக்கிரசேனருடைய தீரச்செயல்—கர்னல் குமரவேல் முதலிய துஷ்டர் தண்டிக்கப்படல்—ஆபத்து ஒழிந்தது.

---

தச்சூர் என்ற சிறு கிராமம் இரொட்டிக் கிடங்கிற்கு இரண்டு மூன்று மைல் தூரத்திலிருக்கிறது. அதில் முப்பது நாற்பது வீடுகளே யுண்டு. ஆனால் காணிபூமிகளையுடைய செல்வவந்தர்களின் வீடுகளும் ஐந்தாறு வீடுகள் அங்குண்டு. உலகநாயகன் வேலையினின்று நீங்கிய பின் அங்கு ஒரு அழகிய வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு அதில் வசித்து வந்தான். அவன் தினம் பகற் காலத்தைப் பெரும்பாலும் இரொட்டிக் கிடங்கிலேயே கழிப்பான். அமராவதியின் அத்தையாகிய இராஜாம்பாள் முன்போல் ஒருவர் முன்னும் வராமல் அறையிலேயே யிருப்பதில்லை. வரவர அவள் துயரம் ஒருவாறு தணிந்தது. அவளும் குடும்பத்திலுள்ள மற்ற பேருடன் கூடி உண்ணவும் சம்பாஷிக்கவும் உலவவும் ஆய்விட்டாள். அமராவதியின் மேலும் உலகநாயகன் மேலும் அவளுக்கு மிக்க அன்புண்டாய் விட்டது. உலகநாயகனைக் காணுந்தோறும் அவன்மேலுள்ள அன்பு அதிகமாகியது. தன்னை யறியாமலே அவளுக்கு அவன் மேல் ஒருவித ஆர்வம் உண்டாகியதோடு அவன் உருவத்தை மறந்துவிட அவளா லாகவில்லை.

பஞ்சநாதம் பிரபுவின் மாளிகையில் நடந்த சம்ப

வங்கள் நேர்ந்து கிட்டத்தட்ட மூன்று மாதங்களான தால், அவர்கள் மனதிலுண்டான துயரம் கோபம் முதலிய உணர்ச்சிகள் கொஞ்சம் கொஞ்சமாக, அடிக்கடி யங்கு வந்துகொண் டிருந்த ஜனரல் உக்கிரசேனரால் சாந்தப்படுத்தப்பட்டன. ஆகையால் கலியாண தினத்தன்று யாவரும் பூரண மனச்சந்தோஷத்தோ டிருந்தார்கள்.

கலியாணதினம் காலை பத்து மணிக்கு யாவரும் இரொட்டிக் கிடங்கிலிருந்து கோயிலுக்குப் புறப்பட ஆயத்தமாய்க் கூடினார்கள். அங்கு அதிக கூட்டமில்லை. வீட்டிலிருப்பவர்களும், உலகநாயகனும், ஜனரல் உக்கிர சேனரும் நீங்கலாக வேறு நான்கு ஆடவரும் நான்கு மாதருமே வந்திருந்தார்கள். மாதரில் இருவர் மணமகளுக்கு வழக்கம்போல் தோழிகளா யமர்ந்தார்கள். யாவரும் உயர்ந்த ஆடையாபரணங்களை யணிந்து கொண் டிருந்தார்கள். சரியாகப் பத்தரை மணிக்கு யாவரும் அங்கிருந்து கோயிலுக்குப் புறப்பட்டார்கள்.

முன்னடியே கோயில் நன்றாய் அலங்காரம் செய்யப் பட்டிருந்தது. முன்னால் மணமகன் மணமகள் இருவரும் தோழிப்பெண்களும் ஏறியிருக்கும் வண்டியும் பின்னால் மற்றவர்கள் வண்டியும் சென்றன. வண்டிகள் கோயில்முன் சென்று நின்றதே கிராமஜனங்கள் அங்கு கூட்டமாகக் கூடி விட்டார்கள். ஜனரல் உக்கிரசேனர் தமது கவர்னர் ஜனரல் பதவிக்குரிய மிக்க கம்பீரமும் விலையுயர்ந்ததுமான உடுப்பை யணிந்துகொண் டிருந்தார். கைப்பிடியில் தங்கத்தில் நவரத்தினங்கள் பதிக்கப்பட்டு ஜொலித்துக்கொண் டிருந்த நீண்ட உடைவாள் அவர் இடையிற் றொங்கியது. அவரும் அவருடைய வாலிப ஆளும் அழகிய புரவிகளின் மேல் ஏறிக்கொண்டு வந்தார்

கள். அங்கிருந்த கூட்டத்திலுள்ள ஒருவன் ஜனரலைக் கண்டதே அவர் யாரென்று தெரிந்துகொண்டு அங்குள்ள மற்றவர்களுக்குக் கூறிவிட்டான். நொடிக்குள் சங்கதி கிராமமுழுமையும் பரவிவிட்டது. யாவரும் அவருடைய பிரதாபத்தை மட்டும் கேள்விப்பட்டிருப்பதால் மிக்க ஆவலோடு அவர் கம்பீர உருவத்தைக்காணப் பெருங் கூட்டமாக அங்கு வந்து கூடினார்கள். ஜனரல் பணத்தைத் தாராளமாக ஏழைகளுக்கு வழங்கினார்.

கோயிலுக்குள் ஆயத்தமாய் வந்திருந்த குரு எதிர் கொண்டுவந்து யாவரையும் உள்ளே யழைத்துக்கொண்டு சென்றார். கால்மணி நேரத்திற்குள் கலியாணச்சடங்கு ஆரம்பமாயிற்று. சரியாய்ப் பனிரண்டு மணிக்கு உலக நாயகனும் அமராவதியும் புருடனும் மனைவியுமாகி வெளியில் வந்தார்கள். உடனே யாவரும் அங்கிருந்து இரொட்டிக்கிடங்கிற்குத் திரும்பினார்கள். அங்கு ஏற்பாட் டின்படி யாவர்க்கும் நல்ல உயர்தரமான விருந்து அளிக் கப்பட்டது. கடைசியில் இரண்டு மணிக்குமேல் அவரவர் கள் தங்கள் இருப்பிடங்களுக்குச்செல்லத்தொடங்கினார் கள். மணமகனும் மணமகளும் இரண்டு தோழிகளோடு நகரத்திலுள்ள ஜனரல் உக்கிரசேனரின் மாளிகைக்குப் புறப்பட ஆயத்தமானார்கள். அமராவதிக்கு அச்சமயம் தனக்கு மணமுடிந்த சந்தோடம் மறைந்து தாய்தந்தை யரைவிட்டுப் பிரிந்துவிட நேர்ந்த துயரமே அதிகமாய் விட்டது. அதையறிந்த ஜனரல் அதற்கு வேண்டிய சமா தானங்களைக்கூறிப் புருடன் மனைவியரைக் குதிரைகளி லேற்றி யனுப்பி விட்டுப் பெற்றோரின் துயரைத்தேற்றச் சுமார் அரைமணிநேரம் அங்கு தங்கியிருந்தார்.

கடைசியில் ஜனரல் உக்கிரசேனரும் அவருடைய

ஆளும் இரண்டரை மணிக்குக் கர்னல் இரகு நாயகர் முதலியவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு இரொட்டிக் கிடங்கிலிருந்து புறப்பட்டார்கள்.

ஜனரல் உக்கிரசேனர் திருமணத்தின் பொருட்டாகவே அன்று ஊரில் தங்கியிருந்து, மறுநாள் அவர் தன் பரிவாரத்தோடு துறைமுக நகரஞ்சென்று, அங்கு ஆயத்தமாகக் காத்திருக்கும் கப்பலில் மேற்கு நாட்டிற்குப் புறப்படவேண்டும். அவருடைய உத்தியோகஸ்தர்கள், பரிவாரங்கள் யாவரும் எட்டிக்குடியில் ஆயத்தமாய் அவர் வரவிற்கு எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். ஆகையால் அவர் தம் ஆளோடு எட்டிக்குடியை நோக்கிச் செல்லத் தொடங்கினர்.

எட்டிக்குடி இரொட்டிக்கிடங்கிலிருந்து இலவணபுரிக்குச் செல்லவேண்டிய பாதைக்கு நேர் எதிர்ப் பக்கத்திலிருக்கிறது. ஜனரலும் அவர் ஆள்காரனும் சுமார் அரைமைல் தூரம் சென்றபோது, தமது ஆள்காரன் என்னமோ கூற எண்ணியிருக்கிறன் என்று அவன் முகக்குறியால் அறிந்த ஜனரல் அவனை நோக்கி, "என்ன சமாசாரம் கூறு" என்றார்.

வேலையாள் "எஜமானே! தச்சூரிலேயே தங்களுக்கு ஒரு சங்கதி கூறவிருந்தேன். மறந்து விட்டேன். காலையில் நாம் கோயிலுக்குச் செல்லுமுன் நான் வெளியில் உலவச் சென்றிருந்தேன். அப்போது பாலத்தின் ஓரத்தில் ஒரு கடிதம் விழுந்து கிடந்தது. அது சீல் செய்யப்பட்டிருந்தாலும் குதிரைக்குளம்பின் கீழ் அகப்பட்டுச் சீல் உடைந்துபோயிருந்தது. நான் அதைப் பிரித்துப் பார்த்தேன். எனக்குக்கல்வி மிக்க குறைவானதால் அதில் இருக்கும்

விஷயம் விளங்கவில்லை. இதோ அக்கடிதம்'' என்று அதை ஜனரலிடம் கொடுத்தான்.

அவர் அதைவாங்கி வாசித்துப் பார்த்தார். கடிதம் அதிகமாக நலங்கியிருந்ததால் முதலில் நன்குவிளங்க வில்லை. பிறகு உற்று நோக்கியபோது யாவும் நன்ருகப் புலப்பட்டன.

அக்கடிதத்தை வாசித்ததும் அவர் முகத்தில் மிக்க கோபமும், வியப்பும் ஆத்திரமும் உண்டாகி விட்டன. அவர் தன் ஆளை நோக்கி,

"என் கூடவா! நீ வாலிபன்! கத்திப்பழக்கமும் அதிகமில்லை. ஆயினும் உனக்குப்போதுமான தைரிய மிருக்கிறதென்று அறிவேன். ஏனெனில் துணிகரமாகச் சண்டை செய்யவேண்டியிருக்கும்" என்று கூறிக் கொண்டே குதிரையைத்திருப்பி நகரத்திற்குச்செல்லும் பாதையை நோக்கிக் குறுக்குவழியாக வேகமாய்ச் செல்லத்தொடங்கினர். வாலிபனும்பின்னலேயே துரித மாகச்சென்ருன். அவனுக்கு இன்னசங்கதி யென்று ஒன் றும் விளங்கவில்லை. இருவரும்குதிரைகளை யதிவேக மாக விட்டுக்கொண்டு குறுக்குவழிகளில் நுழைந்து சென் ருர்கள்.

முன்பு சென்ற உலகநாயகன், அமராவதி, ஒரு வாலிபவேலையாள், ஒரு தோழி இவர்கள் நால்வரும் ஏறிச்செல்லும் குதிரைகள் ஜனரல் உக்கிரசேனரால் பரிசாக அளிக்கப்பட்டவைகள். ஆகையால் அவை நான் கும் உயர்தரமான பலம்பொருந்திய குதிரைகளே. இவர் கள் நகரத்திற்குச்செல்லும் பாதையில் பிரவேசித்துச் சற்று தூரம் மெதுவாகச்சென்று பிறகு சுறு சுறுப்பா கக் குதிரைகளை நடத்தினர்கள்.

போகப்போகச் சதிபதிகளை முன்விட்டு மற்றவர்கள் சற்றுதூரம் பின்னால் வந்துகொண் டிருந்தார்கள். இவர்கள் வழியில் ஆங்காங்குள்ள சிறு கிராமங்களைக் கடந்து கடைசியில் நகரத்திற்கு ஏழுமைல் தூரத்திலுள்ள ஒரு குக் கிராமத்தை நெருங்கும்போது பின்னால் யாரோ அதி வேகமாய்க் குதிரைகளின் மேல் வருவதாகத் தெரிந்தது. உடனே திரும்பிப்பார்த்தபோது, தங்கள் ஆட்களே அவ்வாறு மிக்க ஆத்திரத்தோடு வருகிறார்களென்று கண்டார்கள். முதலில் அவர்கள் குதிரைகள் கைக்கடங்காமல் இப்படி வருகின்றனவோவென்று நினைத்தார்கள். ஆனால் அதற்குள் அவர்கள் பின்னால் கரங்களைக் காட்டிக்கொண்டே "குதிரைப்படைக்காரர் நம்மைத் துரத்தி வருகிறார்கள். அதோ அத்திருப்பத்தைத் திரும்பி வருகிறார்கள்" என்று கூவினார்கள். உலகநாயகன் நின்று பார்த்தபோது, ஆம் உண்மையாகவே சுமார் பனிரண்டு பேர்கள் குதிரைப் படை வீரர்கள் வேகமாக வருவதை யறிந்ததோடு, முன்னேவருபவன் கர்னல் குமரவேல் என்று தெரிந்துகொண்டான். உடனே "ஆபத்து நேரப்போகிறது. கர்னல் குமரவேலே கெட்ட எண்ணத்தோடு கெடுதி செய்யவருகிறான்" என்று உணர்ந்தான்.

உலகநாயகன் தைரியசாலியாகிய சுத்தவீரனே யென்பதில் சற்றும் ஐயமில்லை. ஆயினும் அத்தனை பேரோடு ஒருவன் போராடத் துணிவது முட்டாள் தனமேயாகும். ஆகையால் அவன் தன் ஆட்களை நோக்கி "நீங்கள் பின்னால் நிதானமாக வாருங்கள். உங்களை யவர்கள் ஒன்றும் செய்யமாட்டார்கள்." என்று கூறிவிட்டுத் தன் மனைவியை நோக்கி "காதலியே! நான் எதிரிகள் முன் ஓடிவிடுவது மிக்க அகௌரவம். ஆயினும் இத்தனை

பேர்களோடு போராடத் துணிவது மூடத்தனமாகும். ஆகையால் நாம் ஓடி விடவேண்டியதே. என் அன்பே! நீ தைரியத்தோடு குதிரையைத் துரிதமாய் விடுவாயா?'' என்றான்.

அமராவதி "அய்யோ! தாங்கள் ஆபத்தில் சிக்கிக் கொள்ளவேண்டாம். நான் தைரியமாகவே வருகி றேன்" என்றாள். உடனே இருவரும் அதிவேகமாகத் தங்கள் குதிரைகளை விட்டுக்கொண்டு சென்றார்கள்.

இவர்கள் பேசிக்கொண்டு நின்ற காலம் மிக்ககொஞ் சமே யாயினும் அக்காலம் துரத்திக்கொண்டு வரும் எதிரிகளுக்கு அனுகூலத்தை யளித்தது. அவர்கள் சற்று நெருங்கி வந்துவிட்டார்கள். முன்னே யிருக்கும் கிரா மத்தில் தங்கலாமென்றால் அக்கிராமத்தார் உதவி செய் வார்களென்ற நிச்சயமில்லை. அப்படியவர்கள் உத விக்கு வந்தாலும் ஆயுதபாணிகளாகிய அம்முரட்டுப் போர்வீரர்கள்முன் அவர்கள் நின்று யுத்தம் செய்யமுடி யாது. ஆகையால் அக்கிராமத்தைத் தாண்டி அதிவேக மாய்ச் சென்றார்கள். சதிபதிகள் ஏறிச்செல்லும் புரவி கள் உயர்தரப்புரவிகளானதால் மிகு வேகமாகச்சென் றன. துரத்தி வருவோரோ கண்மண் தெரியாமல் எத் தகைய ஆபத்தையும் கருதாமல் குதிரைகளைத் தங்கள் பாதரட்சைகளிலிருக்கும் முள் சக்கரத்தால் இரத்தம் வரக் குத்தி அதிவேகமாகச் செலுத்தி வருகிறார்கள்.

ஆச்சு, நகரம் இன்னும் ஆறு மைல் தூரமேயிருக் கிறது. அச்சமயம் சற்று தூரத்திலிருக்கும் சிறு கிரா மத்திலிருந்த ஒரு குடியானவன் பாரமாய்ச் சுமையேற்றி யிருந்த தன் வண்டியைப் பாதை யோரமிருந்த புலத்தி லிருந்து பாதையின் குறுக்கே யோட்டிக்கொண்டு

வந்தான். குதிரைகள் பாரத்தை யிழுக்கமுடியாமல் பாதையில் நின்றுகொண்டன. இதைக்கண்ட உலக நாயகன், இதனால் தனக்கு நேரிடக்கூடிய ஆபத்தைக் கருதி மிக்க கோபமடைந்து வண்டிக்காரனை நோக்கி வண்டியைச் சீக்கிரம் அப்புறம் ஓட்டும்படி கூறினன். வண்டிக்காரன் என்ன அதட்டியும் குதிரைகள் நகரவில்லை. பாதையின் இருபக்கமும் வேலிகள் இருந்தபடியால் உல கநாயகன் அதைத் தாண்டிக் குறுக்கு வழியில் செல்லக் கூடுமாயினும் அமராவதி செல்வது கஷ்டம்.

இங்கு நேர்ந்த ஆலசியத்தால் கர்னல் குமரவேலும் அவன் ஆட்களும் நெருங்கி வந்து விட்டார்கள். உலக நாயகன் தன் காதலியை நோக்கி "நீ யொரு யோசனை யும் செய்யாதே! வேகமாக ஓடிவிடு ஓடிவிடு என்று கூறிக்கொண்டே தன்வாளை யுருவிக்கொண்டு வருகிறவர் களை நோக்கித் திரும்பி யுத்தத்திற்கு ஆயத்தமாக நின் ருன். வருகிறவர்களில் முன்னே வந்த கர்னல் குமர வேல் அவன்மேற் பாய்ந்தவர இருவர்க்கும் மும்முர மான யுத்தம் தொடங்கியது. மற்றவீரர்கள் உடனே அமராவதியைச் சூழ்ந்து கொண்டார்கள். ஏனெனில் அவள் தன் கணவனை யாபத்தில் விட்டுவிட்டுத் தான்மட் டும் தப்பித்துக் கொண்டு போய்விடப் பிரியப்படாமல் அங்கேயே நின்றிருந்தாள்.

ஆனல் அச்சமயம் திடீலென்று ஒரு சம்பவம் நேர்ந் தது. பக்கத்திலிருந்த புலத்தின் வழியாக வந்த ஜனரல் உக்கிரசேனரும் அவர் ஆட்காரனும் ஒரு பாய்ச்சலில் வேலியைத்தாண்டி பாதையில் வந்தார்கள். ஜனரலைக் கண்டதே அமராவதி ஒரு சந்தோஷக் கூச்சலிட்டாள். ஜனரல், ஒரு பக்கம் கர்னல் குமரவேலும் உலகநாயகனும்

சண்டையிடுவதையும், ஒருபக்கம் குதிரை வீரர்கள் அமரா வதியைச் சூழ்ந்துகொண் டிருப்பதையும் கண்டு உடனே நிலைமை யிவ்வாறிருக்கிறதென் றுணர்ந்துகொண்டு, தன் வாளை உருவிக்கொண்டார்.

ஜனரல் உக்கிரசேனரைக் கண்ட குமரவேல் தன் வீரர்களை நோக்கி "அப்பெண்ணைச் சிலர் கொண்டு போய்விடுங்கள். போங்கள்" என்று கூவினான். உடனே இருவர் அமராவதி ஏறியிருக்கும் குதிரையின் கடிவாளத்தைப் பற்றினார்கள். ஜனரல் "அடே நில்லுங் கள்" என்று கூவிக்கொண்டே குதிரையைத் தட்டி அவர் கள் மத்தியில் பாய்ந்து நின்றார். அதைக் கண்ட அம் மூடர்கள் சிலர் பெண்ணைக் கொண்டுபோய்விட்டால் சிலர் ஜனரல், உலகநாயகன் இவர்கள் அவளைப் பின்பற் றிச் செல்லாது தடுத்துவிடலாமென்ற நோக்கத்தோடு தங்கள் வாட்களை யுருவிக்கொண்டார்கள்.

ஜனரல் உக்கிரசேனர் கண்களில் நெருப்புப்பொறி பறக்க அவர்களை நோக்கி "அடே துஷ்டர்களே! ஒரு கத்தி என் கத்திமேல் பட்டதோ உங்களிற் பெரும்பா லோர் சவமாக விழுமட்டும் சண்டை நிற்காது" என்றார்.

அத்துஷ்டர்கள் கர்ச்சனையிட்டு ஆ! அப்படியா வென்று சண்டைக்குப் புறப்பட்டார்கள். அவர்களில் ஒருவன் முன்னுக்கு வந்து ஜனரல்மேல் கத்தியை யோங் கித் தாக்கினான். ஜனரல் தன் வேலைக்காரனாகிய சுப்பு ராமனை நோக்கி ஆத்திரத்தோடு,

"சுப்பு! உன்னாலானதைப் பார்!" என்றதும், அவ் வீரரை நோக்கி "கள்ளப்பயல்களே! இனியுங்கள் உயிர் களைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள்" என்று கூறிக்கொ ண்டே தன் மேல் ஓங்கப்பட்ட வாளைத் தன் வாளால்

அலட்சியமாகத் தட்டிவிட்டதும், மறுவினடி முன்னே வந்து தாக்கிய வீரன் சவமாகக் கீழே விழச்செய்தார். உடனே இன்னொருவனுடைய வாள் பிடித்தகரம் அற்றுக் கீழே விழ அவனும் பூமியில் வீழ்ந்தான். இன்னொருவனுடைய வாள் அவன் கரத்திலிருந்து பிடுங்குண்டு தூரத்தில் எறியப்பட்டது.

உடனே ஜனரல் மீதியிருந்த ஆட்களுக்கிடையில் நுழைந்து அமராவதியின் அருகிற் சென்றார். அச்சமயம் இருவர் அவள் குதிரையைச் சற்று எட்டப்பிடித்துச் சென்றிருந்தார்கள். அத்துஷ்டர்கள் மறுபடி ஆத்திரத்தோடு ஜனரலைச் சூழ்ந்துகொண்டார்கள். அமராவதியின் குதிரைக் கடிவாள வாரைப் பற்றியிருந்த இருவரும் தங்கள் குதிரைமேலேறிக்கொண்டு அவள் குதிரையையும் பற்றிக்கொண்டு ஓட்டம் பிடித்தார்கள்.

ஜனரல் உக்கிரசேனர் வெளிப்பார்வைக்குச் சாந்தத்தோ டிருப்பவர்போல் தோன்றினும் சங்காரகர்த்தாவைப்போல் அவர்களை விண்ணுலகிற் குடியேற்றத் தொடங்கினர். அவருடைய குதிரை தன் எஜமானுடைய நோக்கங்களை யப்போதைக்கப்போ துணர்ந்ததுபோல் நாற்புறங்களிலும் சக்கிராகாரமாய்ச் சுழலவும் ஜனரலின் வாள் இரண்டு நிமிடங்களில் ஒருவர்பின் ஒருவராய் மூக்காற் பங்கிற்கு அதிகமானவர்களைக் கொன்றும் காயப்படுத்தியும் பூமியில் வீழ்த்தியது. இடையில் ஒரு வீரன் ஜனரலின் பின்பக்கம் வந்து அவரை வெட்ட வாளை யோங்கினன். ஜனரலின் வேலையாளான சுப்பு அதைக் கண்டதே ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவன் சிரசைத் துண்டித்துத் தன் எஜமானுயிரைப் பாதுகாத்தான்.

ஜனரல் உடனே குதிரையை வேகமாக விட்டுக்

கொண்டு அமராவதியைப் பின்பற்றிச் சென்றார். இரண்டொரு நிமிடங்களுக்குள் உலகநாயகன் அவரிடம் வந்து சேர்ந்தான். ஜனரல் "அத்துஷ்டனாகிய குமரவேல் என்னவானான்?" என்று கேட்டார்.

உலகநாயகன் "அவன் வலது கரத்தில் பலத்த காயம் பட்டு அக்கரம் உதவாமற்போகக் கீழே வீழ்ந்து விட்டான். அதோடு அவன் சரியான காவலில் வைக்கப் பட்டிருக்கிறான். ஆ! அமராவதியும் அக்கள்ளப்பயல்களும் அதோ செல்கிறார்கள்" என்று சற்று தூரத்தில் செல்வோரைச் சுட்டிக்காட்டினான்.

ஜனரல் "சே இரண்டேபேர்; ஆளுக்கொருவர். தட்டி விடு குதிரையை ஒரு நொடியிற் பிடித்துக்கொள்ளலாம்" என்றார். அவ்வாறே இரண்டு நிமிடங்களில் அவர்கள் முன்னே செல்வோரை நெருங்கிவிட்டார்கள். இரண்டு வீரர்களும் இவர்கள் வருவதைக் கண்டதும் இவர்களைச் செயித்தாலன்றி நாம் இப்பெண்ணைப் பிடித்துக்கொண்டு போக முடியாதென்று கருதி யுத்தத்திற்கு ஆயத்தமாகத் திரும்பி நின்றார்கள்.

ஜனரல் அவர்களருகில்வந்ததும் "அடே பேசாமல் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டால் உயிர் தப்பினீர்கள், இன்றேல் எமனுலகம் சேர்வது நிச்சயம்" என்றார். அத்துஷ்டர்கள் "இதோ உங்களையே எமனுலகம் சேர்க்கிறோம் பாருங்கள்" என்று மேல்விழுந்து தாக்கத் தொடங்கினார்கள். இரண்டு நிமிடங்களுக்குள் ஜனரலையெதிர்த்தவன் முகம் இரண்டாகப் பிளக்கப்பட்டுச் சவமாகத் தரையில் வீழ்ந்தான். மறுநிமிடம் உலகநாயகனும் தன்னை யெதிர்த்தவனைச் சங்கரித்துத் தள்ளினான்.

சற்று எட்டவிருந்து நடந்த கோரமான யுத்தத்தைப் பார்த்துக்கொண்டிருந்த அமராவதி தன் காதலனும் ஜனரலும் ஒரு ஆபத்துமின்றி ஜயமடைந்தார்களென்றும் நாம் காப்பாற்றப்பட்டோம் என்றும் அறிந்ததே உண்டான சந்தோஷத்தால் மூர்ச்சையாக விழுந்துவிட்டாள்.

ஜனரல் உலகநாயகனை நோக்கி "அதோ தெரியும் கிராமத்திற்கு அமராவதியைக் கொண்டுபோவோம். இவள் மூர்ச்சையடைந் திருக்கிறுளேயன்றி வேறு பயமில்லை" என்று கூறி அவனைத் தேற்றினர். உடனே இருவரும் அவ்வாறே யவளை யெடுத்துக்கொண்டு கிராமத்திற்குச் சென்று அங்கிருந்த ஒரு வீட்டில் ஒரு அறையில் அவளைப் படுக்கவைத்துத் தக்க உபசாரங்கள் செய்யத் தொடங்கினர்கள். அமராவதி சீக்கிரத்திலேயே மூர்ச்சை தெளிந்து எழுந்து உட்கார்ந்து சாதாரணமாகப் பேசத் தொடங்கினள். ஜனரல், உலகநாயகனை நோக்கி "நீ இங்கேயே யிரு; நான் முதலில் சண்டை நடந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு வருகிறேன்" என்றார்.

உலகநாயகன் "நானும் வருகிறேன்" என்று கூறிவிட்டுத் தன் மனைவியை நோக்கி இனி நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். அத்துஷ்டர்க ளனைவரும் மடிந்தும் காயம்பட்டும் விழுந்துவிட்டார்கள். எங்களை யெதிர்க்க ஒருவருமில்லை. நாங்கள் சீக்கிரம் திரும்பி வந்துவிடுவோம். அதற்குள் நமது ஆட்கள் இங்கு வந்துவிடுவார்கள்" என்று தேறுதல் கூறினன். உடனே அவனும் ஜனரலும் வந்தவழியே திரும்பினர்கள்.

## 32-வது அத்தியாயம்

கர்னல் குமரவேல் சிறையாக்கப்படல்—நியாயாதிபதி முன் விசாரணை—நகரசிறைச்சாலைக்குக் கொண்டு போகப் படல்—ஜனரல் உக்கிரசேனர் துறைமுகம் செல்லுகிறார்—கர்னல் குமரவேலின் அக்கிரம நயவஞ்சக மோசச் செயலும்—திடுக்கிடும் சம்பவம்.

---

ஜனரல் உக்கிரசேனரும் உலகநாயகனும் சண்டை நடந்த விடத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில் உலகநாயகன் ஜனரலை நோக்கி "நான் சுப்புராமனையும் சண்டை நடந்த விடத்திற்கருகிலிருந்த மூன்று நான்கு விவசாயிகளையும் கர்னல் குமரவேலுக்குக் காவலாக வைத்து விட்டு வந்தேன்" என்றான். இருவரும் அந்த இடத்திற்குச் சென்றபோது கர்னல் குமரவேல் வலது கரத்தில் பட்ட பலத்த காயத்தால் அக்கரத்தையுபயோகிக்கக் கூடாதவனாகப் பாதையோரத்தில் உட்கார்ந்திருந்தான். சுப்பு அவன் காயத்தைக் கட்டிக்கொண்டிருந்தான். இரண்டு விவசாயிகள் பெரிய கழிகளைக் கரத்திலேந்தி அவன் இருபக்கங்களிலும் காவல் நின்றிருந்தார்கள். இன்னும் இரண்டு மூன்றுபேர் இறந்து கிடப்பவர்களை யிழுத்துக்கொண்டுபோய் ஒரு குடிசையில் போட்டுக்கொண் டிருந்தார்கள்.

யாவும் நிதானமாகப் பார்த்தபோது கர்னலோடு கூடவந்த குதிரைப்படைவீரர்கள் பன்னிருவர் என்றும், அவர்களில் எழுவர் மரித்துப்போக இருவர் பிராணபத்தான காயங்களடைந்து இரண்டொரு நாழிகைகளில் மரணமடையும் நிலைமையி லிருக்கிறார்களென்றும், மூவர் பல

மான காயமடைந்திருந்தாலும் பிழைப்பார்களென்றும் தெரியவந்தது. ஜனரலேயும் உலகநாயகனையும் கண்ட கர்னல் குமரவேல் கோபத்தோடும் அகங்காரத்தோடும் அவர்களை நோக்கி "நான் உங்களிடம் சிக்கிக்கொண்டேன். ஆனல் உங்களை மன்னுப்பு கேட்பேன், வேண்டிக்கொள்வேன் என்று கருதவேண்டாம். நீங்கள் என்ன செய்கிறீர்களோ செய்து விடுங்கள்" என்றான்.

ஜனரல் அவனை நோக்கி, "கர்னல் குமரவேல்! எதிரி தோல்வியடைந்து விழுந்து விடுவதால் நேரும் அவமானம் இருக்கிறதே, அதுவே போதுமான தண்டனை யென்று கருதத்தக்க சந்தர்ப்பங்களும் உண்டு. ஆனல் நீ செய்த குற்றம் மிக்க இழிவும், மிக்க அகௌரவமும், அக்கிரமும், கோழைத்தனமுமானது. ஒருவன் நாயைப் போல் மேல்விழுந்து கண்மண் தெரியாமல் நடந்துகொள்வது மட்டுமே சுத்தவீரத்தன்மையாகாது. போர் முனையில் அஞ்சாது, பகைவர் முன் நின்று பின்னிடையாது போர் புரிந்து வென்றாலும் தோற்றாலும் அவன் சுத்த வீரனே. அவ்வாறே தனக்குச் சமமான ஒருவனேடு சம ஆயுதங் கொண்டு போர் புரிவதும் வீரத்தனமே யாகும். முரட்டுத்தனமான பழகிய ஆயுதம் தரித்த போர்வீரர்கள் பதின்மூன்றுபேர் ஒன்று சேர்ந்து ஒரு வாலிபனைத்தாக்கி அவன் மனைவியாகிய கன்னிகையை யபகரிக்க முயல்வது பெண்மையினும் கோழைத்தனமாகும். இதோடு இன்றே மணம்புரிந்து கொண்ட சதிபதிகளைப்பிரித்து அவர்கள் வாழ்நாளின் சுகத்தை யடியோடழிக்க முயன்றனை. இது மட்டுமோ! அநியாயமாக ஏழு புருடர்களைக் கொல்வித்தாய் இன்னும் இருவர் மரணத்தறுவாயி லிருக்கிறார்கள். இத்தகைய சொல்லொணு அக்கிரமத்திற்கு நீதிப்படி தக்க

தண்டனை யடையச் செய்வதே தகுதியாகும். ஆதலால் உன்னைக் கொண்டுபோய் நியாயாதிபதி யிடம் ஒப்பித்து விடப்போகிறேன்" என்றார்.

கர்னல் "உமது பிரியப்படி செய்யலாம்" என்றான். அச்சமயம் உலகநாயகனுடைய ஆட்காரனும் தாதியும் அங்கு வந்து சேர்ந்து தங்கள் எஜமானைக் கண்டதும் மிக்க கலவரத்தோடு விசாரித்தார்கள். உலகநாயகன் அவர்களுக்கு நடந்த சங்கதியைச்சுருக்கமாகக்கூறித் தன் மனைவி க்ஷேமமாக இருக்கும் இடத்தையும் அறிவித்து, தானும் ஜனரலும் குற்றவாளிகூட நியாயாதிபதி யிடம் சென்று சாட்சி கூறவேண்டி யிருப்பதால் தாங்கள் இன்னும் ஒருமணி நேரங் கழித்து வருவதாக அமராவதி யிடம் கூறும்படிச்சொல்லி யனுப்பினான்.

அந்த விடத்திற்குச் சுமார் ஒன்றரை மைல் தூரத்தில் ஒரு நியாயாதிபதி யிருந்தார். அவர் விசேஷ காணியாட்சிகளை யுடையவர். இவர்கள் அங்கு செல்கிற வேளைக்கு அவர் வீட்டிலிருந்தார். அவர் வயது முதிர்ந்தவர்; நியாயவான். அவருடைய தம்பிபுதல்வனாகிய பரமசிவன் என்ற வாலிபன் அவரிடமே அவர் ஆதரணையிலிருந்து வருகிறான். அவன் சுமாராகக் கல்விகற்றவனாதலால் அவனே நியாயாதிபதியிடம் இலிகிதர் வேலை செய்துவந்தான். நியாயாதிபதி கர்னல் குமரவேலைப்போன்று உயர்தர இராணுவ உத்தியோகத்திலிருப்பவன் இத்தகைய மிக்க அக்கிரமும் அயோக்கியமுமான குற்றத்தைச் செய்ததை யறிந்ததே மிக்க கோபமும் அவன் மேல் வெறுப்பு மடைந்தார். மேற்கு நாட்டின் கவர்னர் ஜனரலாகிப் பிரசித்திபெற்ற ஜனரல் உக்கிரசேனர் அங்கு வந்திருப்பதை யறிந்ததே நியாயாதிபதியின் குடும்பத்திலுள்ளோரும்

ஏனைய கிராமவாசிகளும் மிக்க வியப்போடும் ஆவலோடும் பெருமையோடும் அவரை வந்து பார்த்தார்கள்.

ஜனரல் உக்கிரசேனர் பிராதைக்கூறி முதல் சாட்சியமாகத் தம்மிடம் கிடைத்த அக்கடிதத்தை நியாயாதிபதியிடமளித்தார். உலகநாயகன் ஜனரல் மூலமாய் அதைப்பற்றிச் சுருக்கமாகவே பாதையில் கேள்விப்பட்டிருந்தபோதிலும், அதிலிருந்த முழுவிபரமும் அவனுக்குத்தெரியாது. நியாயாதிபதியின் இலிகிதர் அக்கடிதத்தைக் கெட்டியாய் வாசித்துக் காட்டினர். அதில் கீழ்க்கண்டபடி எழுதியிருந்தது:—

"நீ இதே தினம் மாலை ஒரு வாலிபக் கலியாணப் பெண்ணை யுன் கூண்டில் ஏற்றுக்கொள்ளச் சர்வாயத்தமாக இருக்கவேண்டும். அவள் அபூர்வமான வனப்புடையவள். நான் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன் கொண்டு வருவதாய்க் கூறியிருந்த அதே பெண்தான் இவள். அச்சமயம் அவள் காதலன் அங்கு வந்து விட்டதாலும், நான் அனுப்பிய இரண்டு ஆட்களும் கோழைகளாக இருந்து விட்டதாலும் அக்காரியம் நிறைவேறுமற் போயிற்று. இப்போது அப்படியல்ல; "ஒரு வாலிபனும் ஒரு கன்னிகையும் கலியாணம் செய்துகொண்டு நகரத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறுர்கள். பத்துப் பனிரண்டு ஆயுதந்தரித்த வீரர்கள் திடீலென்று பாதையில் அவர்களைச் சூழ்ந்துகொண்டு அப்பெண்ணை தூக்கிக் கொண்டு போய் விடுகிறுர்கள்'' இதே நடக்கப்போகிற விஷயம். ஆகையால் இச்சமயம் ஒரு தவறும் நேராது. கட்டாயம் அப்பெண் உன்னிடம் வந்து சேரும். நீ சர்வாயத்தமாயிரு. உனக்குத் தாராளமான பரிசு கிடைக்கும். நான் அதிகமாக எழுதவேண்டுவதில்லை.

இப்படிக்கு,
கர்னல் குமரவேல்.''

இக்கடிதத்தை இலிகிதர் வாசித்ததே உலகநாயக னுக்கு அடங்காக்கோபம் வந்தது. ஜனரல் உச்கிரசே னர் அவன் மனக்கொதிப்பை யறிந்து சமிக்கை செய் தார். அக்கடிதந்தான் கர்னல் குமரவேல் தன் வேலைக் காரவாலிபனிடம் அன்று காலை எழுதிக்கொடுத்து அனுப் பியது. அவன் எப்படியோ தெய்வசங்கல்பமாய் அதை இரொட்டிக்கிடங்கி னருகிலுள்ள பாலத்தருகில் தன்னிட மிருந்து கைநழுவ விட்டான்.

அதன் பிறகு ஜனரலும் உலகநாயகனும் நடந்த சங் கதிகள் யாவும் விவரமாகக் கூறினர்கள். யாவும் கேட்ட நியாயாதிபதிகடைசியில் குற்றவாளியை நோக்கி "கர்னல் குமரவேல்! இதற்கு நீர் என்ன கூறப்போகிருய் ? நீ கூறு வதற்கு ஒன்றுமேயில்லை யென்று நன்ருய்த் தெரிகிறது. சாதாரண மனிதனுக் கிருக்க வேண்டிய அறிவுள்ள உணர்ச்சி யுனக்கிருக்கு மாயின் நீ யுடனே பேசாமல் உலகநாயகன் பாதங்களில் படிந்து அவனுடைய மன்னுப் பைப் பெற்றுக்கொள்வாய்" என்ருர்.

உலகநாயகன் "நியாதியாதிபதி யவர்களே! இம் மனிதன் இப்போது என்னிடம் மன்னுப்புக் கேட்டுக் கொள்ள வேண்டியதில்லை. அரசனுடைய நீதி பொருந் திய சட்டத்திற்கு இவன் சமாதானம் கூறிக்கொள்ளட் டும்" என்ருன்.

நியாயாதிபதி "இது ஒவ்வொரு அம்சத்திலும் பிர மாதமான குற்றமாக விருக்கிறது. இது என் தண்டனைக் குள் அடங்கியதல்ல. இதைவிட மேலான நீதிச்சபையே யித்தகைய கொடிய குற்றத்திற்குத் தண்டனை யளிக்க வேண்டும். ஆகையால் நான் இக்குற்றவாளியை ஸெஷ னுக்கு அனுப்பி விடுகிறேன்" என்ருர்.

இம்மொழிகளைக்கேட்டதே கர்னல் குமரவேல் பீதியடைந்தான். ஆனல் தைரியத்தோடு நியாயாதிபதியை நோக்கி "அய்யா! அரசருடைய சைனியத்தில் ஒரு உயர்ந்த அந்தஸ்திலிருக்கும் உத்தியோகஸ்தருக்குத் தாங்கள் இத்தகைய பெரிய அகௌரவமான சம்பவத்தை யுண்டாக்கத் துணியலாகாது" என்ருன்.

நியாயாதிபதி:—"உண்மையே. ஆனல் உத்தியோகஸ்தன் அரசனுடைய நீதிக்கும் உத்தியோகத்திற்கும் பெரிய அவமானத்தை யுண்டாக்கி விட்டபோது அவன் மரியாதைக்கு அத்தகைய கௌரவமுண்டென்று கருதாமலே என் கடமையை நான் செலுத்தவேண்டியவனக விருக்கிறேன். ஆகையால் என்னிலும் மேலான நியாயசபையார் உம்மை விசாரணை செய்யுமட்டும் நீர் நகரத்திலுள்ள கள்ளர் வைக்கப்படும் சிறைச்சாலையில் சிறைவைக்கப்பட வேண்டும் என்று கட்டளை யிடுகிறேன்" என்ருர்.

இதைக்கேட்டதே கர்னல் குமரவேல் இடிவிழுந்தவன் போலாய்விட்டான். முதலில் உலகநாயகனையும் ஜனரல் உக்கிரசேனனையும் மன்னிப்புக் கேட்கத்தொடங்கி "நீங்கள் என் மேல் தயவுகாட்டுவதாயின்...நான் வேண்டிக்கொள்கிறேன்...இது எனக்கு அடியோடு அழிவை யுண்டாக்கிவிடும்" என்று கூறினன். ஆனல் அதற்குள் அகங்காரம் தலை நிமிர்ந்து ஆடத்தொடங்கவே "சேச்சே! வேண்டாம் வேண்டாம், நான் உங்களை மன்னிப்புக் கேட்டதாகவே நீங்கள் கருதலாகாது. சே சே! ஒரு போதும் அப்படிக்கூறேன். நியாயாதிபதியே! தாங்கள் எப்படி வேண்டுமாயினும் செய்யுங்கள். ஆயினும் என்னோடு போலீஸ்காரனை யனுப்பி என்னை [illegible]படுத்

தாமல் வேறு யாரையேனும் அனுப்பக் கோருகிறேன். நான் தப்பித்துக்கொண்டு போய்விடுவதில்லையென்று சத்திய வாக்குறுதி கூறுகிறேன்" என்றான்.

நியாயாதிபதி ஜனரல் உக்கிரசேனரையும் உலகநாயகனையும் குறிப்பாய் உற்று நோக்கினார். அவர்கள் கர்னல் கோரியபடி செய்வதில் தங்களுக்கு ஆக்ஷேபனையில்லையென்று கூறினார்கள். அதன்மேல் நியாயாதிபதி கர்னலை நோக்கி "கர்னல் சைனியத்தில் உத்தியோகஸ்தனாக விருக்கும் ஒருவன் இச்சத்தியவாக்கை மீறி நடப்பதைவிட வேறு பெரிய அவமானம் ஒன்றுமேயில்லை. நீர் இவ்வாக்குப்படி நடப்பதாயின் இதோ இலிகிதர் வேலைசெய்யும் பரமசிவனை யும்மோ டனுப்புகிறேன்" என்றார். குற்றச்சாட்டு சம்பந்தமான சாக்ஷியங்கள் முதலிய யாவும் எழுதி முடிந்தபின் சிறைச்சாலையில் கர்னல் குமரவேலைச் சேர்த்துக்கொள்ளும்படி வாரண்டும் எழுதி முடிந்ததும் கர்னலும் பரமசிவனும் அங்கிருந்து சிறைச்சாலைக்குப் புறப்பட்டார்கள்.

ஜனரல் உக்கிரசேனரும் உலகநாயகனும் நியாயாதிபதியிடம் விடைபெற்றுக் கொண்டு அமராவதி யிருக்குமிடத்திற்குத் திரும்பினார்கள். இவர்களிருவரையும் கண்டதே அக்கன்னிகை மிக்கச் சந்தோஷமடைந்தாள். சதிபதிகளிருவரும் அவருக்கு மறுபடி தங்கள் நன்றியறிதலை வெளியிட்டார்கள். ஜனரல் அவர்களை நோக்கி, நான் இனி எட்டிக்குடிக்குச் செல்லலாமென்று நம்புகிறேன். என் ஆள்காரன், சற்று இளைப்பாறுவதற்காக வழியிலுள்ள ஹோட்டலில் சற்று தங்கியிருந்து, இரவு எந்நேரமாயினும் எட்டிக்குடிபோய்ச் சேர்ந்து விடுவோம். நாளையதினம் என் பரிவாரத்தோடு துறைமுகநகரம் சேர்ந்து

மேற்கு நாட்டிற்குக் கப்பலேறவேண்டும்.'' என்று கூறி அரிதிற்பிரிந்து சென்றார். உலகநாயகனும் அமராவதியும் ஆட்களும் நேராய் நகரத்தை நோக்கிச் சென்றார்கள். அவர்கள் ஒரு இடையூறு மின்றி இரவு ஒன்பது மணிக்கு ஜனரல் உக்கிரசேனருடைய மாளிகையை யடைந்தார்கள். இவர்கள் வழியில் தங்கியிருந்த வீட்டுக்காரர்கள் ஜனரல் கொடுத்த உதாரமான பரிசால் மிக்க சந்தோஷமடைந்தார்கள்.

இப்போது நாம் கர்னல் குமரவேலும் பரமசிவனும் எவ்வாறு செல்கிறார்களோ கவனிப்போம். கர்னலிடம் ஆயுதமில்லை. அவன் வலதுகரமும் காயம்பட்டுப் பயனற்றதாக விருக்கிறது. பரமசிவனோ இரண்டு கைத்துப்பாக்கிகள் வைத்திருப்பதோடு உடைவாளும் அணிந்து கொண் டிருக்கிறான். இவர்கள் புறப்படும் போது மாலை ஆறு மணிக்குமே லாய்விட்டது. எங்கும் காரிருள் சூழ்ந்திருந்தது. நியாயாதிபதியின் வாசஸ்தலத்தி லிருந்து நகரத்திற்குச் செல்லும் பாதையில் இரண்டொரு சிறு கிராமங்களேயிருந்தன. ஆகையால் பெரும்பாகம் ஜனசஞ்சாரமில்லாத காட்டுமார்க்கமாகவே யிருந்தது. பரமசிவன் சுமார் இருபத்தி நான்கு வயதுடையவன்; மிக்க பலம் பொருந்திய தேகமுடையவன். அப்பாதையில் அக்காலத்தில் கள்ளர் பயம் அதிகமானதால் பரமசிவன் ஆயுதபாணியாக வந்தது அதற்காகவே யென்று கர்னல் கருதலாகுமாயினும், தன்னை ஓடிப்போகவொட்டாமல் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்வதற்கும் கொண்டு வந்திருப்பான் என்று அவன் மனதிற்பட்டது.

சற்று தூரம் செல்வதற்குள் கர்னல் தனக்குள் ஒரு யோசனை செய்துகொண்டான். வாக்குத் தவறுவதால்

வரும் அவமானத்தைவிடச் சிறைவாசம் மிக்க அவமான மானதென்று அவன் மனதிற்பட்டது. கொஞ்சக்காலம் தப்பித்துக்கொண்டு எங்கேனும் மறைந்திருந்தால் மத னும்பாள் சீமாட்டி மூலமாக எப்படியேனும் தப்பித்துக் கொள்ளலாம் என்று அவன் தனக்குள் தீர்மானித்துக் கொண்டான். பரமசிவன் நெறிதவறி நடப்பவனுகக் காணப்படவில்லை. ஆதலின் கிரமமோ அக்கிரமமோ தந்திரமாகவே தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று சிந் தித்துக்கொண்டு பரமசிவனிடம் மெதுவாகச் சம்பாஷிக் கத்தொடங்கி, "அய்யா! இத்தகைய சமயத்தில் ஒரு போலீஸ்காரன் என் கூடவரும் அவமானத்தினின்று என்னைக் காப்பாற்றத் தாங்களே யிக்கஷ்டத்தை யெடுத் துக்கொண்டதற்காக மிக்க வந்தனமளிக்கிறேன்" என்று உண்மையகாவே நன்றி பராட்டுபவன் போற் கூறினுன்.

பரமசிவன் பெருந்தன்மையான கம்பீரகுணமும் சூதுவாதில்லாத நன்னெறியு முடையுவன். ஆகையால் சற்று பரிதாபத்தோடு "அய்யா! நீர் எத்தகைய குற் றம் செய்திருந்தபோதிலும் உமக்கும் நம்மால் கூடிய தகுதியான உதவியைச் செய்யவேண்டியது கடமையே யாகும். மேலும் என் பெரியதந்தையின் கட்டளைப்படி நான் நடக்கிறேன். உம்மைப்போன்ற நல்ல கௌரவ பதவியிலுள்ள ஒரு உத்தியோகஸ்தன் இத்தகைய மிக்க அவமானமும் ஆபத்துமான இக்கட்டில் சிக்கிக்கொண் டது விசனிக்கத்தக்க விஷயமே" என்றுன்.

கர்னல்:—"ஆ! தாங்கள் இரக்கங் காட்டுவதற்காக மிக்க வந்தன மளிக்கிறேன். என்னுலேயே-என் முட்டாள் தனத்தாலேயே-யாவும் நேர்ந்தது. ஆயினும் என் வேலைக்காரனுடைய அஜாக்கிரதையே யிவ்வளவுக்

கும் காரணமாயிற்று. வேலைக்காரன் நினைவு வந்த போது இன்னொரு விஷயம் எனக்கு மனவருத் தத்தை யுண்டாக்குகிறது. பாபம் நான் வருவேன் வருவேன் என்று அவன் காத்துக்கொண்டிருப்பான். நடந்தசங்கதி யவனுக்குத் தெரியாதாகையால் அவன் மிக்க துயரமடைந்து வருந்துவான்'' என்றான்.

முதலில், ஜனரல் உக்கிரசேனர் எட்டிக்குடிக்குச் சென்றுகொண் டிருந்தவர் சமயத்தில் உலகநாயகனுக்கு உதவிசெய்ய எப்படி அங்கு வந்தார் என்பது கர்னலுக்கு விளங்கவில்லை. விசாரணையில் ஜனரல் தம்மிடமகப்பட்ட கடிதத்தை நியாயாதிபதிக்குக் காட்டிய போதுதான், தன் வீட்டுக்காரிக்குத் தன் வேலையாளிடம் காலையில் தைய நாயகிச்சீமாட்டி வீட்டிலிருந்து தான் கொடுத்தனுப்பிய கடிதத்தை யவன் வழியில் விட்டுவிட்டான் என்றும், அது ஜெனரலிடம் சிக்கிக்கொண்டு தனக்கு விரோதமான முதல்தர சாக்ஷியாகி விட்டதென்றும் தெரிந்து கொண் டான். ஆனல் அப்போதேனும் கடவுள் மிக்க அபூர்வ மான மார்க்கங்களால் நிரபராதிகளாகிய சற்சனருக்கு உதவிபுரிகிறார் என்றும், துஷ்டருடைய கிருத்தியங்கள் நிறைவேற வொட்டாது செய்கிறாரென்றும் அந்த அறி விலியின் புத்தியிற் புலப்படவில்லை.

பரமசிவன் கர்னலைநோக்கி:—“கர்னல் உமது வேலைக் காரனை நீர் காணும்படி செய்ய நான் பிரயாசை யெடுத்துக்கொள்கிறேன். உம்மைக்கொண்டுபோய்ச் சிறைச்சாலையில் விட்டு விட்டு நாளைக்காலை முன்னே உமது வேலைக்காரனைக்கண்டு சிறைச்சாலைக்கு அவனை யனுப்பி விட்டு நான் வீட்டிற்குச்செல்வேன்'' என்றான்.

கர்னல்:—ஆ! தங்கள் அன்பிற்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன். அந்தோ சிறைச்சாலையில் மிக்க கடினமான சட்டங்கள் இருக்கின்றன. என் வேலைக்காரன் என்னைக்காண அனுமதி பெறுவது மிக்க கஷ்டம். நான் இந்த இரவுமட்டும் அவனைக்கண்டு இரண்டொரு வார்த்தைகள் கூறக்கூடுமாயின், என் கஷ்டங்கள் கொஞ்ச மேனும் குறையும். இப்போது உண்மையாகக் கூறுகிறேன்; அப்போதே உலகநாயகனையே மன்னுப்புக் கேட்டுக்கொள்ளாமற் போனேமே யென எனக்குத் தோன்றுகிறது'' என்றான்.

இவன் கபடவார்த்தைகளைக்கேட்ட பரமசிவன் உண்மையாகவே யிவன் மனஸ்தாபப்படுகிறானென்று கருதி "இன்னமும் முரட்டுப்பிடிவாதமாகவே யிராமல் இப்போதேனும் இப்படி நீர் சிந்திப்பதைப்பற்றி நான் சந்தோஷமடைகிறேன். என் பெரியதந்தை யும்மிடம் குறிப்பாய் அதைக் கூறியபோது நீர் அந்த உலகநாயகன் என்பவருடைய பாதத்தில் விழுந்தேனும் மன்னுப்புக் கேட்டுக் கொண்டிருக்கவேண்டும்'' என்றான்.

கர்னல்குமரவேல்:—தங்கள் அனுதாபத்திற்காக மிக்க வந்தனமளிக்கிறேன். இந்த இரவு என் வேலைக்காரனைக் கண்டால் அவன் மூலமாக உலகநாயகனுக்குக் கொஞ்சம் பணிவான வார்த்தைகளைக்கூறி யனுப்பினால் என் மனதிற்கு எவ்வளவோ தேறுதலாகவிருக்கும். அதோடு என் நண்பர் ஒருவருக்கும் இதைத் தெரிவிக்கும்படி கூறலாகும்'' என்றான்.

பரமசிவன் "உமது வேலைக்காரன் இப்போது எங்கே யிருப்பான்'' என்றான். கர்னல் "நான் கடிதம் எழுதியனுப்பினேனே, நியாயாதிபதியிடம் சாட்சியாகக்

காட்டப்பட்ட கடிதம்-அம்மாதின் வீட்டில்தான் மிக்க ஆவலோடு எனக்காகக் காத்துக்கொண் டிருப்பான்" என்றான்.

பரமசிவன்:—"அந்த வீடு நகரத்தின் வடகோடியிலிருக்கிறதென்று விலாசத்தில் பார்த்த நினைவிருக்கிறது. நாம் அங்கு செல்வதாயின் நாம் போகிற நேர் வழியை விட்டு மிக்க தூரம் விலகிச் செல்ல வேண்டும்" என்றான்.

கர்னல்:—"ஆ! தாங்கள் என் மேல் கொஞ்சம் கிருபை வைத்து எனக்காக அவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டால் நான் என்றென்றும் அந்நன்றியை மறக்கவே மாட்டேன்" என்று மிக்க பரிதாபமாகக் கேட்டான்.

பரமசிவன் சற்று சிந்தித்து விட்டு "கர்னல்! நான் பாதையை விட்டு விலகிவருவது என்பெரிய தந்தையின் கட்டளைக்கு மீறி நடப்பதாகும். நீர் தப்பித்துக்கொள்ள முயல்வதில்லை யென்று சத்தியம் செய்து கொடுத்திருக்கிறீர். ஆயினும் இப்போது நீர் கூறுகிறபடி உமது வேலையாளிடம் உம்மைப்பேசவிடுவதால் நீர் எவ்விதமாகவும் தப்பித்துக்கொள்ள முயன்று எனக்குத் துன்பமுண்டாக்குவ தில்லை யென்று என்னிடம் சத்தியம் செய்து கொடுக்கவேண்டும்" என்றான்.

கர்னல் அவ்வாறே செய்து கொடுத்த பின் இருவரும் வழியைவிட்டு வேறு வழியிற் திரும்பி கர்னல் கூறிய வீட்டை நோக்கிச் சென்றார்கள். இவர்கள் அதை நெருங்கும்போது இரவு ஒன்பது மணியிருக்கும். அவ் வீடு நகரவோரத்தின் அருகில் ஜனசஞ்சாரமில்லாத விடத்தில் இருந்தது. அச்சமயம் வீடு மூடப்பட்டு நிர்ச்சந்தடி

யாக விருந்தது. குதிரைகள் வெளியில் வந்து நின்ற சத்தத்தைக் கேட்டதும் கர்னலின் வேலைக்காரன் கையில் தீபத்தோடு வந்து கதவைத் திறந்தான். அவன் தன் எஜமானையும் இன்னொருவனையும் கண்டதே சந்தோஷமடைந்து, ஆனால் சற்று பயத்தோடு "ஆ! வந்து விட்டீர்களா! எஜமானே என்னை மன்னிக்கவேண்டும். நான் மிக்க வேகமாக வந்து கொண்டு..." என்பதற்குள் கர்னல் "போதும் அக்கடிதத்தைப் போக்கடித்துவிட்டாய்; நான் யாவுமறிவேன் பயப்படாதே. உன்னை மன்னித்து விட்டேன். நான் அவசரமாக இப்பெரிய மனிதர்கூட இப்போதே போகவேண்டும். நீ யுடனே புறப்பட்டு அரியநாதம் பிரபுவிடம் நான் கூறுகிறபடி கூறி உலகநாயகனை யவர்போய்க் காணும்படி செய்யவேண்டும்" என்று நாலைந்து கஜ தூரத்திலிருக்கும் பரமசிவனுக்குக் கேட்கும்படி கூறியபின் வேலைக்காரனை நோக்கி இப்படி அருகில் வா!" என்றான்.

வேலைக்காரன் அப்படியே யுடனே செல்கிறேன் என்றான். அச்சமயம் கர்னல் பரமசிவனை நோக்கி "இரண்டொரு வார்த்தைகள் இவனிடம் இரகசியமாகச் கூறுவதற்காக மன்னிக்க வேண்டுகிறேன்" என்றான். பரமசிவன் "சரி சரி நீ வாக்குத்தத்தம் அளித்திருக்கிற வரையில் உன் இரகசியத்தைப் பற்றி நான் கவனிக்கவேண்டிய அவசியமில்லை" யென்றான்.

கர்னல் குமரவேல் குனிந்து தன் வேலைக்காரன் செவியில் "இப்போது நான் கூறியயாவும் வீண்வார்த்தைகள். கூட இருப்பவனை யேமாற்ற. என்னிடம் ஆயுதமில்லை. வலக்கரமும் உதவாது. நீ உதவி செய்தால் தப்பித்துக் கொள்வேன். திடீலென்று என்கூட இருப்பவன் மேல்

பாய்ந்து அவனைக் கீழே தள்ளிக் கெட்டியாய்த் தொண்டையைச் சிவிங்கிபோல் விடாமல் பற்றிக்கொள். மற்ற விஷயம் நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றான். வேலைக்காரன் "இதோ குதிரையேறி யிப்போதே செல்கின்றேன்" என்றான். கர்னல் குமரவேல் பரமசிவனை நோக்கி "இனி நாம் செல்லலாம் என்றதே ஒரு சந்தேகமும் கொள்ளாத அவன் சாவதானமாகக் குதிரையைத் திருப்பினான். மறுவினாடி வேலைக்காரன் ஒரு பாய்ச்சலாக அவன் பின்னாலிருந்து பாய்ந்து திடீலென்று அவன் கரத்தைப்பற்றி யிழுத்து அவனைக் கீழே வீழ்த்திக் கெட்டியாய்ப் பற்றிக்கொண்டான். ஆயினும் பரமசிவன் இரண்டொரு நிமிடங்களில் அவனை யுதறிவிட்டிருப்பான். அதற்குள் கர்னல் குமரவேல் இடக்கரத்தை யூன்றிக் குதிரையினின்று கீழேகுதித்துப் பரமசிவன் குதிரைச் சேணத்தில் சொருகியிருந்த இரண்டு கைத்துப்பாக்கிகளில் ஒன்றையெடுத்து அதன் கைப்பிடிக் கட்டையால் சற்றும் இரக்கமின்றிப் பரமசிவன் சிரசின்மேல் மோதி யொரு அடி அடிக்க அவன் மூர்ச்சையடைந்து விட்டான்.

வெளியில் சச்சரவு நடந்ததைக் கேட்டதும் வீட்டிற்குள்ளிருந்த மாதர் முதலியோர் வெளியில் ஓடிவந்தார்கள். ஆனால் கர்னல் இரண்டொரு வார்த்தைகளால் அவர்கள் கலக்கத்தை யடக்கி "இவன் இறந்து போகவில்லை. நாங்கள் சென்ற பின் சாவதானமாய் நீங்கள் இவன் மூர்ச்சையைத் தெளிவாக்கலாம்" என்று கூறிவிட்டு வேலைக்காரனை நோக்கி "உன் குதிரைக்குச் சேணம் போடவேண்டாம் ஆலசியமாகும். இவன் குதிரை மேல் ஏறிக்கொண்டு கூடவே வா" என்றான்.

உடனே இருவரும் குதிரைகளை யதிவேகமாகவிட்

டுக் கொண்டு விடிவதற்குள் துறை முகத்திலுள்ள ஒரு நகரம் சேர்ந்து காலையில் புறப்பட ஆயத்தமாக விருந்த ஒரு கப்பலி லேறி மாலைப்போது அந்நிய இராஜாங்கமாகிய பாஞ்சால நாட்டுத் துறைமுக நகரமாகிய கலயனூர் போய்ச் சேர்ந்தார்கள்.

---

## 33-வது அத்தியாயம்

கர்னல் குமரவேல் மதனம்பாள் சீமாட்டியால் ஏமாற்றமடைதல்—உலகநாயகன் பெருந்தகைமை—கலயனூர் ஹோட்டல்—சரவணப்பிள்ளை—கடல் மாளிகையில் விருந்தும் கேளிக்கையும்—சரவணனிடம் துஷ்டருக்கு நல்ல வேட்டை.

---

தன் வேலைக்காரன் இலவண புரியிலிருந்தால் அவனைப் பிடித்துக் கொள்வார்களென்றஞ்சியே கர்னல் குமரவேல் அவனையும் கூடக் கலயனூருக்கு அழைத்துக் கொண்டு போய்விட்டான். அவன் கையில் மிக்க பணம் இருந்தது. கொஞ்ச நாட்கள் வரையில் வேலைக்குச் செல்லாதிருப்பதால் உத்தியோகத்திற்கு ஆபத்து நேராதென்று அவன் அறிவான். அதோடு மதனம்பாள் சீமாட்டியே தான் செய்த குற்றத்தைத் தூண்டியவள். அவள் இதில் சம்பந்தப்பட்டிருப்பதால் தன் பெயர் வெளியில் வராமலிருப்பதைக் கருதித் தனக்கு எவ்விதத்திலேனும் உதவிசெய்து ஆபத்து நேராவண்ணம் காப்பாற்றி விடுவாள் என்ற நம்பிக்கை யவனுக்கிருந்தது. அப்படி ஆபத்து நேர்ந்தால் காப்பாற்றுவதாகவும் அவள் வாக்களித்திருக்கிறாள். ஆகையால் இரண்டொரு

வாரத்திற்குள் தன் குற்றங்களனைத்தும் அடியோடு மன்னிக்கப்படுமென்றே தனக்குள் தீர்மானித்துக் கொண்டு, உடனே அச்சீமாட்டிக்கு ஒரு கடிதம் எழுதினன்.

அக்கடிதத்தில் விவரமாக ஒன்றையும் கூருமல் தனக்கு நேர்ந்த ஆபத்துகளைக் கூறி "தாங்கள் எல்லா மறிந்திருப்பதாலும், தங்கள் கட்டளைப்படிக்கும் ஏற்பாட்டின்படிக்குமே நான் நடந்து கொண்டதாலும் தாங்கள் வாக்களித்தபடி என்னை யிந்த ஆபத்தினின்று சீக்கிரம் காப்பாற்று வீர்களென்று பூரணமாக நம்பியிருக்கிறேன். தங்கள் வாக்கு அரசர்க்கு வேதவாக்கியம் போன்றதாகையால் மிகச் சுலபமாகவே தாங்கள் என்னை மன்னிக்கும்படி செய்யலாம். இந்த விஷயம் அடியோடடக்கப்படாமல் வெளிவரும் பட்சத்தில் இதில் தங்களுக்குள்ள சம்பந்தமும் வெளிவருமென்பதை நான் கூற வேண்டுவதின்று. இதற்கஞ்சியே நான் சத்தியம் தவறிய அகௌரவத்தை யேற்றுக்கொண்டு இங்கு வந்து தலைமறைந்திருக்கிறேன்" என்று எழுதினன். கர்னல் குமரவேல் இக்கடிதத்தை அவ்வூர் வாசியாகிய ஒருவனிடம் கொடுத்து மதனம்பாள் சீமாட்டியின் கரத்திலேயே யளிக்கும்படி ஏற்பாடு செய்து, அவனுக்குச் செலவிற்குத் தாராளமாய்ப் பணமளித்ததோடு, விடைவாங்கிக் கொண்டுவந்தால் பரிசளிப்பதாகவும் கூறினன்.

அம்மனிதன் அன்றே கலயனூரிலிருந்து புறப்பட்டு மறுநாள் மாலை இலவணபுரி சேர்ந்து அடுத்த நாள் காலை மதனம்பாள் சீமாட்டியைக் கண்டு கடிதத்தை யளித்தான். அச்சீமாட்டி அதை வாசித்துப் பார்த்து, சற்று நேரம் சிந்திக்கலானள். இப்போது இவனுக்கு உதவி செய்ய முயன்றல் தான் அதில் சம்பந்தப்பட்டிருப்பதாக

அரசனுக்குச் சந்தேகம் உண்டாகும். ஜனரல் உக்கிரசேனர் அதில் பிரவேசித்து உலகநாயனுக்கு உதவி செய்து அமராவதியைக் காப்பாற்றி விட்டார் என்பதையறிந்ததே, அடடா நாம் ஏன் இந்த வேலையைச் செய்தோமென்று அவளுக்குப் பெருந்திகி லுண்டாய்விட்டது. கர்னலுக்கு உதவி செய்யா விட்டால் அவன் தன் விஷயத்தை வெளியிடுவானோவென்று சிந்தித்தாள். அதற்கு ருசுவில்லை யென்று அவள் மனதிற்குப் புலப்பட்டது. அன்று காலை வாணிவிலாசத்தில் கர்னலைக் கண்டு பேசியதாலேயே இந்த ஏற்பாட்டைத் தான் செய்ததாக எப்படி அவன் ருசுப்படுத்த முடியும்? மேலும் தையநாயகிச் சீமாட்டி தன் பிரியப்படி நடந்து கொள்வாள் என்ற நம்பகம் மதனும்பாளுக்குண்டு. தானே கர்னலைப் போஜனத்திற் கழைத்ததாகவும் மதனும்பாள் தற்செயலாகவே அவனைக் கண்டாளென்றும் வேறு விஷயங்களொன்றும் பேசவில்லையென்றும் அச்சீமாட்டி கூறிவிடுவாள்.

யாவும் யோசித்தபோது நமக்கொரு சங்கதியும் தெரியாதென்று அடியோடு மறுத்துவிடுவதே நலமென்று மதனும்பாள் மனதிற்குப் புலப்பட்டது. ஆகையால் கடிதம் கொண்டுவந்த ஆளை மறுபடி தன் எதிரில் வரவழைத்து அவனை நோக்கிப் பின் வருவாறு கோபத்தோடு கூறினாள்:—

"ஏ! மனிதனே! உன்னை யனுப்பிய மனிதனிடம் சென்று நான் இவ்வாறு கூறியதாகக் கூறு: ஜனசமுகத்திற்குச் சற்றும் அடாத மிக்க அநீதமும் அகௌரவமுமான குற்றங்களைச் செய்துவிட்டு அதற்கு மன்னிப்புப் பெற என்னைச் சிபாரிசு செய்யும்படி எழுதும் அவனுடைய துணிகரம் எனக்கு மிச்க வியப்பை யளிக்கிறது. அந்த

ஆளுக்கும் எனக்கும் அத்தகைய அறிமுகம் எப்போ துண்டானதாக அந்த ஆள் கருதுகிருனே எனக்கு விளங் கவில்லை. இது பெரிய அதிகப்பிரசங்கித்தனமான செய் கை. அவன் எந்தக் கட்சிக்கு அனுசரணையாக இருந்து கொண் டிருக்கிருனே அந்தக் கட்சியாரிடம் உதவி பெற் றுக்கொள்ளச் சொல். போ! இவ்வாறு நான் கூறினே னென்று கூறு" என்று கோபத்தோடு கண்டிதமாகக் கூறினள்.

அம்மனிதன் யாவும் கேட்டுக்கொண்டு அன்றே யங் கிருந்து புறப்பட்டுக் கலயனூர் போய்ச்சேர்ந்து கர்னல் குமரவேலிடம் சங்கதியைக்கூறினன். மதனம்பாள் கூறிய விடையைக் கேட்டதே அவன் முதலில் திப்பிரமை யடைந்து சற்று நிதானித்துப் பிறகு அம்மனிதனைநோக்கி "நான் கொடுத்த கடிதத்தை நீ யாரிடம் கொடுத்தாய்? அம்மாது எப்படி யிருக்கிருள்?" என்று கேட்டான்.

அம்மனிதன் யாவும் விவரமாகக் கூறியபோது மத னம்பாள் சீமாட்டியே யவ்வாறு கூறியவள் என்று அவ னுக்கு அய்யமின்றி விளங்கியதும் அவனுக்குண்டான கோபத்திற்கு அளவேயில்லை. அவளுடைய அயோக்கிய குணத்தைக்கண்டு இத்தகைய மாதும் உலகிலிருப்பாளோ வென்று கருதினன். இவள்மேல் எவ்வகையாலேனும் நாம் வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேணடுமென்று தனக் குள் தீர்மானம் செய்துகொண்டான்.

இந்த வஞ்சந்தீர்த்துக்கொள்ளும் எண்ணம் இனி மேல் நிறைவேற வேண்டிய விஷயம். அதனல் மனத் திருப்தியே யன்றித் தனக்கொரு பயனுமில்லை. இப்போது தன் நிலைமை மிக்க ஆபத்தான நிலைமைக்கு வந்து விட் டது. என் செய்வான்? ஒரு வழி யிருக்கிறது. அதாவது,

உலகநாயகன் உதாரமும் பெருந்தன்மையுமான குணம் வாய்ந்தவன். ஆதலால் அவனுக்குப் பக்குவமாகக் கடிதம் எழுதினுல் அவன் தன்மேல் செய்திருக்கும் பிராதைத் திருப்பிக்கொள்வான். அவன் அப்படிச்செய்து விட்டாலும் சிறைச்சாலைக்குக் கொண்டுபோகப் படும்போது காவலனை மூர்ச்சையாகும்படி அடித்துவிட்டுக் காவலிலிருந்து ஓடி விட்டதற்குப் பிரத்யேகமாகக் குற்றம்சாட்டித் தண்டிக்கலாம். உலகநாயகன் தன்னை மன்னிப்பதாயின் பரமசிவனுக்கும் மெதுவாய்ச் சமாதானங்கூறி அவனும் தன்னை மன்னிக்கும்படிச் செய்யலாம். என்று இவ்வாறு கர்னல் குமரவேல் தனக்குள் சிந்தித்துக்கொண்டு கடைசியில் உலகநாயகனுக்கே எழுதுவதென்று தீர்மானித்தான்.

கர்னல் குமரவேலின் அகங்காரம் பொருந்திய சுபாவத்திற்குத் தாழ்மையாகவும் வேண்டிக்கொண்டும் மன்னுப்புக் கேட்டுக்கெள்வதாக எழுதுவது மிக்க கஷ்டமாகவிருந்தது. ஆயினும் மனதை மிக்க கஷ்டத்தோடு அடக்கிக்கொண்டு, எழுதத்தொடங்கி, ஐந்தாறு முறை எழுதியெழுதிக் கிழித்துவிட்டுக் கடைசியில் ஒருவாறு துணிந்து எழுதி முடித்து முன் அனுப்பிய ஆள்வசமே அனுப்பினுன்.

உலகநாயகனுடைய பெருந்தன்மை வாய்ந்த குணத்தைப்பற்றி நேயர்கள் அறிந்தேயிருக்கிறீர்கள். கர்னல் குமரவேல் இவ்வளவு துன்பத்தை யனுபவிப்பதே அவனுக்குப்போதுமான தண்டனை யென்று கருதினுன். ஏனெனில் சாதாரணமாகச் சூது கபடம் இல்லாத அவனும் அமராவதியும் அத்துஷ்டன் உண்மையாகவே இப்போது தன் குற்றத்தை உணர்ந்து மனத்தாப முறு

கிறுன் என்று கருதி இரங்கங்கொண்டு மன்னித்து விடத் தீர்மானித்தார்கள்.

அதோடு போகாமல் கர்னல் வேண்டிக்கொண்ட படியே உலகநாயகன் நேரில் சென்று நியாயாதிபதியை யும் பரமசிவனையும், கர்னலை மன்னிக்கும்படி தன்னால் கூடியவரையில் கேட்டான். அவர்களோ "இத்தகைய குற்றம் செய்த அசத்தியனும், நம்பி இரக்கம் காட்டித் தனக்கு நன்மை செய்தவர்களையே இக்கட்டில் சிக்கும்படி செய்த பரமதுஷ்டனுமாகிய இவனை மன்னிக்கலாகாது. மேலும் அவன் பரமசிவனைக் கொல்லாமலிருக்க வேண்டு மென்று நினைத்தவனல்ல. அவன் பிழைத்தது தெய்வசகா யமேயாகும். அத்தகை சண்டாளனுக்குத் தாங்கள் சிபா ரிசு செய்வதைப்பற்றி விசனிக்கிறோம். தாங்கள் மன்னித் ததேதவறான நீதி. அபாத்திரனுக்கு இரக்கம் காட்டுகிறீர் கள். அது நீதியாகாது. தேளைத் தீயினின்றும் காப்பாற் றினால், காப்பாற்றினவனையே கரத்தில் கொட்டும். என்ன நடந்தாலும் இத்தகையோர்க்கு மன்னுப்புச் செய் தால் மறுபடி சமயம் நேர்ந்ததே நமக்குத் தீங்கு செய் வது உண்மை" என்றார்கள்.

உலக நாயகன் அதற்கு மேல் ஒன்றும் கூறமுடியா மல் தான் மன்னித்து விட்டதாகவும், பரமசிவன் அதற் குச் சம்மதிக்கவில்லை யென்றும் பதில் எழுதி வந்த ஆளி டம் கொடுத்தனுப்பி விட்டான்.

கர்னல் குமரவேல் உலகநாயகன் மன்னித்த வரை யில் பிரதானமான ஆபத்து தீர்ந்து விட்டதென்றும், இன்னும் சில நாட்கள் சென்றால் பரமசிவன் கோபமும் தணிந்து விடுமென்றும் சற்று தேறுதலடைந்தான். இதற் கிடையில் பரமசிவனுக்கே நேராக ஒரு கடிதம் 'அனுப்

புவதென்று தீர்மானித்து, அவ்வாறே யொன்றெழுதி மூன்றும் முறை தன் ஆளையனுப்பினான். அவன் போய்த் திரும்பிவந்து, பரமசிவன் வெளியூருக்குச் சென்றிருப்ப தாகவும், அவன் திரும்பி வர இரண்டு மூன்று வாரங்கள் செல்லுமென்றும், அவன் வந்தபின் அவனைப் பதில் அனுப்பும்படி செய்வதாக அவனுடைய பெரியதந்தை கூறினாரென்றும் கூறினான்.

இனி பரமசிவன் பதில் அனுப்பும்வரை கலையனூரில் தங்கியிருக்க வேண்டுமே யன்றி வேறு வழியில்லையென்று குமரவேல் தெரிந்து கொண்டான். அவனிடம் இன்னும் போதுமான தொகையிருப்பதால் ஜீவனத்திற்குக் கஷ்டமில்லை. கலையனூர் சுமாரான ஒரு சிறிய நகரம். இலவணபுரி இராஜ்ஜியத்தில் தகாத குற்றங்களைச் செய்து விட்டுத் துரைத்தனத்தார் கையில் சிக்காமல் ஓடிப்போய் விட்டவர்களும், கடன்காரர் சிறைச்சாலைக்குப் பயந்து ஓடிப்போய் விட்டோரும், தங்கள் மேல் ஒன்று, இரண்டு, மூன்று வாரன்டுகளுடையோரும், ஆகிய இத்தகை பெயரே பெரும்பாலும் அங்கு வசிப்போர். அவர்களுக்கு அது ஒரு அடைக்கலத்தானம் போன்றது. அவர்கள் அங்கும் பலவிதத் தந்திரங்களாலும், அக்கிரமாகத் தாங்கள் தங்கள் நாட்டினின்று சம்பாதித்து வந்த செல்வத்தாலும், சூதாட்டம் முதலிய துர் நடக்கைகளாலும் ஏராளமான பொருளைச் செலவிடுகிறதால் அந்நாட்டு வர்த்தகர் முதலியோர் அவர்களால் நல்ல இலாபமடைகிறார்கள். இக்காரணத்தால் பாஞ்சாலநாட்டுத் துரைத்தனத்தார் அவர்களைப்பற்றி கண்டுங்காணாம லிருந்து வந்தார்கள்.

கலையனூரில் கடல்மாளிகை என்ற ஒரு ஹோட்டல் உண்டு. மேற்கண்ட ஆசாமிகளெல்லாம் பொழுது போ

ளுல் அங்கு கூட்டமாகக் கூடி இரவு முழுதும் சூதாட்டம் முதலிய விளையாட்டுகளில் காலங்கழிப்பார்கள். யாராவது கொஞ்சம் பணமுடைய ஆள் தங்கள் நாட்டிலிருந்து அங்கு வந்தால் இத்துஷ்டர்கள் அவர்களைத் தந்திரமாய்த் தட்டிப் பறிப்பது வழக்கம். கர்னல் குமரவேலும் அந்த ஹோட்டலுக்குத் தினம் செல்வதும் இரவு முழுவதும் காலத்தை யங்கேயே கழிப்பதுமாக விருந்தான் என்று நாம் கூறுவது அனுவசியமே.

அவ்வூரிலுள்ளவர்களில் ஒருவன், கொஞ்சம் பொருளுடையவன்; அவன் ஓர் சிறு கப்பல் வைத்திருந்தான். அதையவன் வேடிக்கையாகக் கடலில் சென்று வருவோர்க்கு வாடகைக்கு விட்டுக்கொண் டிருந்தான். அடிக்கடி அந்த ஹோட்டலில் வந்து சேருவோர்களிற் சிலர் ஒன்று சேர்ந்து வேண்டிய சிற்றுண்டி வகைகள் குடிவகைகள் முதலிய-கேளிக்கையாகக் காலம் கழிப்பதற்கு வேண்டிய-யாவும் எடுத்துக்கொண்டு காலையில் அக்கப்பலிலேறி கடலில் சுற்றிக்கொண்டிருந்து மாலை கரைக்கு வந்து சேர்வார்கள்.

கர்னல் குமரவேல் பரமசிவனிடமிருந்து விடை வருமட்டும் கலியனூரிலேயே தங்கியிருக்கவேண்டும். அவனிடம் பணம் இருந்த போதிலும் அது தினேதினே குறைந்து கொண்டே வருமன்றோ? அப்படி நேரிடாதபடி அவன் சூதாட்டத்தால் தினம் பணம் சம்பாதித்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் கர்னல் குமரவேலும், அங்கு அவனுக்கு அறிமுகமாகி விட்ட ஆட்கள் ஐந்தாறு பேரும், வேடிக்கைக் கப்பலிலேறி கடலுக்குச் சென்றிருந்து திரும்பி வந்துகொண் டிருந்தார்கள்.

வேடிக்கைக் கப்பல் கரைக்குச் சற்று தூரத்தில் வரும்

போது வேறொரு சிறியகப்பல் கரையை நோக்கி வந்து கொண்டிருப்பதைக் கண்டார்கள். அக்கப்பல் மிக்க அழகிய கப்பலாயிருந்தது. அதின் இலவணபுரி இராச்சியக் கொடி பறந்துகொண்டிருந்தது. வேடிக்கைக்கப்பலிலிருந்தவர்கள் மேல்தட்டிலேறி அக்கப்பலிலிருந்தவர்களை கூவியழைத்து "இது யாருடைய கப்பல் என்ன வேலையாக வந்தது? எங்கு செல்வது?" என்று வினவினார்கள். அப்போது மாலை ஆறுமணிக்குமேலாகிவிட்டதால் ஒரு கப்பலி லிருப்பவர்கள் உருவம் மற்றொரு கப்பலிலுள்ளவர்களுக்குத் தெளிவாய்ப் புலப்படவில்லை. ஆயினும் ஆட்கள் மட்டும் காணப்பட்டார்கள். வந்த கப்பல் ஆட்கள் இவர்கள் கேட்டதற்கு விடையாக,

"இது சரவணப்பிள்ளை என்ற கோடீஸ்வரருடைய கப்பல்; அவர் வேடிக்கையார்த்தமாக இரண்டொரு நாட்கள் இத் துறைமுக நகரில் சந்தோஷமாக இருந்துவிட்டுச் செல்ல வந்திருக்கிறார்" என்றார்கள். அதற்குள் சரவணப்பிள்ளை யென்பனே மேல் தட்டிற்கு வந்தான். "புதிதாய் யார் வருவார்களோ, அவர்கள் செலவில் நன்றாகக் குடித்துத் தின்று பணமும் பறிக்கலாமோ" என்று காத்திருக்கும் துஷ்டக் கூட்டத்தாராகிய அவர்கள் சரவணப்பிள்ளைக்கு உச்சார வார்த்தைகள் கூறி "நம் தாய்நாட்டாராகிய தாங்கள் இங்கு வந்ததற்கு மிக்க சந்தோஷமடைகிறோம். எங்கே இறங்கப்போகிறீர்கள்? யாரேனும் நண்பர் உளரோ?" என்றார்கள்.

சரவணப்பிள்ளை:—நண்பர்களே! இங்கு எனக்கு யாரும் தெரிந்தவர்களே இல்லை. ஆனால் கேளிக்கையாகக் காலங்கழிக்க நல்ல நண்பர்கள் இங்கு கிடைப்பார்களென்றுமட்டும் கேள்விப்பட்டிருக்கிறேன். அவ்

வளவே வேண்டியது. ஒரு நல்ல ஹோட்டலுக்குச் சென்று பணத்தைத் தாராளமாக வீசினல் எத்தகைய உயர்ந்த குடிவகைகளும் உணவும் கிடைக்கின்றன. கடலில் வேடிக்கையாய் உலவவும் மீன் வேட்டை யாடவும் நமது கப்பல் இருக்கவே யிருக்கிறது. அதற்கென்றே இது செய்யப்பட்டது. நான் பணத்தைப் புதைத்து வைத்து அன்னியர்க்களிக்கும் மூடர்களைச் சேர்ந்தவனல்ல. ஆண்டவன் திரண்ட செல்வத்தை யளித்திருக்கக் காலத்தைச் சந்தோஷமாகக் கழிக்கவேண்டு மென்பதே என் கொள்கை" என்ருன்.

உடனே கர்னல் குமரவேலும் அவன் கூட்டாளிகளும் "நண்பரே! நாங்களெல்லோரும் உமது கட்சியைச் சேர்ந்தவர்களே. தாங்கள் கரையிறங்கியதும் கோட்டையைநோக்கிச் சென்ருல், கோட்டையில் மேற்கு வாயிலுக்குச் சுமார் இருநூறு கெஜதூரத்தில் "கடல் மாளிகை" என்ற ஹோட்டலைக் காண்பீர். அதுதான் இங்குள்ள இரண்டு மூன்று ஹோட்டல்களில் முதல்தரமும் நாணயமுமானது. நல்ல அந்தஸ்துள்ளவர்கள் யாவரும் அங்குதான் செல்வார்கள். இரவு எட்டு மணிக்கு அங்கு வந்தால் தேவபோகத்தை யனுபவிக்கலாம். தங்களுக்கு ஆனந்தத்தை யளிக்கத்தக்க நண்பர்களை யங்கேதான் காணலாம்" என்ருர்கள்.

சரவணன்:—நண்பர்களே! எனக்கு இவ்வளவு விஷயங்களைக் கூறியதற்காக நான் உண்மையாகவே உங்களுக்கு மிக்க வந்தன மளிக்கிறேன். இனி நான் எதைப்பற்றியும் யாரையும் விசாரிக்கவேண்டிதில்லை. கூடியசீக்கிரத்தில் கரையில் உங்களைச் சந்தித்து உங்

களை யென்னோடு ஒரு கிண்ணம் ஒயினுவது அருந்தும் படி செய்தால்தான் என் மனம் திருப்தியடையும்'' என்றான்.

அக் கள்ளப்பயல்கள் எங்களை எட்டு மணிக்குக் கட்டாயம் கடல் மாளிகையிற் காணலாமென்றார்கள். இதற்குள் புதிதாய் வந்த கப்பல் துறைமுகத்தில் பிரவேசித்துவிட்டதால், இவர்கள் தங்கள் இறங்கு துரைக்குச் சென்று கரை இறங்கினார்கள். இவர்கள் மனதிலுண்டான சந்தோஷத்திற் களவேயில்லை. ஏனெனில் சரவணன் பேசியமாதிரியால் அவனும் தங்களைப்போன்றவனே யென்றும், ஆனால் மிக்க செல்வமுடையவன், பெருந்தொகையான பணம் கையில் கொண்டு வந்திருப்பான். கண்மண் தெரியாது செலவு செய்யும் சுபாவமுடையவன் என்றும் அவர்கள் மனதில் அய்யமின்றி புலப்பட்டது. ஆகையால் அவனிடம் நல்ல பொருள் பறிக்கலாம், நமக்கு நேர்த்தியான மிக்க கொழுத்த வேட்டை யகப்பட்டது என்று ஆனந்தங் கொண்டார்கள்.

சரியாக எட்டு மணிக்கு ஹோட்டலில் வழக்கம் போல் யாவரும் கூட்டம் கூடிக்கொண்டு புது ஆளின் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண் டிருந்தார்கள். யாவரிலும் நமது கர்னல் குமரவேல்தான் மிக்க ஆவல் கொண்டிருந்தான். ஏனெனில் சூதாட்டத்திலும் அகௌரவமான கள்ள ஆட்டம் ஆடிப் பொருள் சம்பாதிப்பவனுதலால் சரவணனிடம் பெருந்தொகை யபகரிக்கலாமென எதிர்பார்த்தான்.

சரியாக எட்டரைமணிக்குச் சரவணன் ஹோட்டலுக்குள் வந்தான். அவன் வேலையா ளொருவன் அவன்கூட வந்தான். சரவணன் சற்று உயரமாய் உஷ்ணதேசவாசி

போல் சற்று சிவந்த முகமுடையவனுக விருந்தான். அவன் அணிந்திருந்த உடை சற்று உயர்தரமானதாயினும் மாலுமிகளணியும் உடைபோன்றிருந்தது. அவன் தேகத்திற்கு அது மிக்க தாராளமானதாக விருந்ததால் அவன் தேகக்கட்டு எத்தன்மையதென அறியக்கூடாததாக விருந்தது. அவன் தலை முழுமையும் இருந்த சிகை சற்று நீண்டு சுருண்டு சுருண்டு கழுத்து வரையிலும் தொங்கிக்கொண்டிருந்தது. மீசை செழித்து அடர்ந்து வளர்ந்து மிகப் பெரிதாக விருந்ததாலும், தாடியும் சற்று குட்டையேயெனினும் அதிக உரோமங்களையுடையதாக விருந்ததாலும், அவன் வாய் அடியோடு கண்களுக்குப் புலப்படவில்லை. அவனுடைய இடது கண்மேல் ஒரு கறுப்புப் பில்லை வைத்து கட்டிக்கொண் டிருந்தான். இவற்ருல் அவன் முகத்தின் மேல்பாதி யடியோடு மறைக்கப்பட்டிருந்தது.

அவன் வந்து உட்கார்ந்ததும் ஹோட்டல்காரனை நோக்கி உயர்ந்த ஒயின் புட்டிகள் ஆறு கொண்டு வரும்படி கூறிவிட்டு அங்கிருந்தவர்களை நொக்கி, கப்பலில் எனக்குத் தயவோடும் அன்போடும் இந்த ஹோட்டலைப் பற்றி சிபாரிசு செய்த நண்பர்களில் சிலரேனும் என் முன் இருக்கிறீர்களென்று நம்புகிறேன்" என்ருன். அதற்கவர்கள் ஆம் என்று கூறி மிக்க உபசாரத்தோடு அவனுக்கு நல்வரவு கூறி, அத்தகைய உதார குணமுள்ள நண்பர் கிடைத்தது கடவுளால் தங்களுக்களிக்கப்பட்ட பெரிய கௌரவமென்று புகழ்ந்து கொண்டாடினுர்கள். ஹோட்டல்காரன் ஒயின் புட்டிகளைக்கொண்டுவந்ததே சரவணன் அங்குள்ள அனைவரும் தன்னேடுருந்திம்படி யழைத்தான். உடனே உயர்தரமான போஜனமும் யாவருக்கும் பரிமாறும்படி கட்டளையிட்டான்.

கர்னல் குமரவேலும் அவன் நண்பர்களும் சரவணன் அலட்சியமாய்ப் பணத்தைச் செலவு செய்வதைக் கண்டு மிக்க சந்தோஷ மடைந்தார்கள். யாவரும் தங்கள் தங்களால் கூடியவரைக் குடிப்பதும் உண்பதுமாக விருந்தனர். ஆனால் யாவர்க்கும் அவ்வளவு தாராளமாக விருந்தளிக்கும் சரவணன் மட்டும் மிக்க கொஞ்சமாகவே குடித்தான். யாவரும் அதைப்பற்றி வியப்படைவதை யுணர்ந்த சரவணன் அவர்களை நோக்கி,

"நண்பர்களே! நான் சாராயம் கொஞ்சமாகக் குடிப்பது உங்களுக்கு வியப்பை யுண்டாக்கலாம். அந்தோ மனம் பிடித்துக்கொண்டு மிக்க கஷ்டத்தோடு குடிக்காமலிருக்கிறேன். உண்மை யென்னவெனில் என்னைப்போல் ஒருவரும் குடிக்காமாட்டீர்கள். ஒரு மாதத்திற்கு முன் நான் இலவணபுரியிலிருந்த ஒரு ஹோட்டலில் சென்று தாராளமாகக் குடித்துக் கொண்டிருந்தேன். கடைசியில் அளவுமீறிக் குடித்து விட்டபோது சில துஷ்டர்கள் சேர்ந்துகொண்டு என்னிடமிருந்த பணம், மோதிரங்கள், பொன் கடிகாரம், யாவும் பிடுங்கிக் கொண்டதோடு அளவு மீறி என்னால் சகிக்கமுடியாத அடியடித்தார்கள். அப்போது தான் ஒரு அடி கண்ணில்பட்டு இந்த இடது கண் பார்வையே யிப்போதில்லாமலிருக்கிறது. டாக்டர் சிகிச்சை செய்து வருகிறார். இது சுகப்படுமட்டும் குடிக்கவே கூடாதென்றார். நான் கொஞ்சமாவது குடிக்காமலிருக்கக்கூடவில்லை" என்றான். இந்த விவரம் அவர்களுக்குத் திருப்தியாக விருந்தது.

அதன் பிறகு முதலில் சாதாரணமாகச் சீட்டாடுவதென்றாரம்பித்து பிறகு சூதாடத் தொடங்கினார்கள். சரவணன் முதலில் ஒரு பவுன் இரண்டு பவுனைத் தோற்று

பிறகு அதிகமாகத் தோற்கத் தொடங்கினன். ஆயினும் அவன் அதையொரு இலட்சியம் செய்யாமல் சந்தோஷத் தோடு இன்னும் அனைவர்க்கும் வேண்டிய சாராயம் கொடுக்கும்படிக்கும் பலகாரம் முதலியவைகள் பரிமா றும்படிக்கும் கட்டளையிட்டுக் கொண்டே யிருந்தான். யாவரும் அவன் பணத்தில் நல்ல கொள்ளையடித்தார்கள். கர்னல் குமரவேலே யாவரினும் அதிகமாகச் சம்பாதித்த வன். கடைசியில் சுமார் மூன்று மணிக்குக் கூட்டம் கலை யும்போது, சரவணன் "நாளை பகல் பத்துமணிக்கு நாமெல்லோரும் வேடிக்கையாகக் கப்பலில் கொஞ்சதூ ரம் சென்று கேளிக்கையாக இருந்துவிட்டு மாலை கரைக் குத் திரும்பி விடலாம்" என்று யாவருக்கும் கூறிவிட்டு ஹோட்டல்காரனை யழைத்து ஏராளமான சாராய வகை களும் ஆகார வகைகளும் தன் கப்பலுக்கு அனுப்பும்படி கட்டளையிட்டான்.

இதைக் கேட்டதே அத்துஷ்டர்க ளெல்லாம் மிக்க சந்தோஷமடைந்து சரவணனுக்கு வந்தனங்கூறி அவனை யதிகமாக முகஸ்துதி செய்தார்கள். அவன் சுபாவம் முகஸ்துதியால் மிக்க சந்தோஷமடைவதாகத் தோன்றிய தால், இத்துஷ்டர்கள் நாளைக்கு இன்னும் அதிகமாக அவ னைக் கொள்ளையடிக்கலாமென்று நம்பி மிக்க ஆனந்த முற்றார்கள்.

## 34-வது அத்தியாயம்

கர்னல் குமரவேலும் விசுவநாதனும்—ஞானப்பிரகாசம் குரு-கர்னல் குமரவேலும் விசுவநாதனும் சரவணனுடைய கப்பலில் சேர்தல்—துஷ்டனுடைய சந்தோஷமனைத்தும் பெருந்துயரமாய் மாறுதல்—அதிசய சம்பவம்—கர்னல் மறுபடி சிறை செய்யப்பட்டான்.

---

அன்று ஹோட்டலினின்று செல்லும்போது கர்னல் குமரவேல் தட்டித் தடமாடிக்கொண்டு வீடு போய்ச் சேர்ந்தான். மறுநாள் காலை நேரங்கழித்து எழுந்து நித்தியகடன்களை முடித்துக் கொண்டு கொஞ்சம் ஆகாரம் அருந்தி வீட்டிலிருந்து வெளிவந்து சற்று தூரத்திற் செல்வதற்குள், கலையனூரில் தனக்குச் சிநேகமான விசுவநாதன் என்ற ஒருவனைச் சந்தித்தான். அவனுக்கு வயது சுமார் ஐம்பது இருக்கும். .அவன் இலவணபுரியில் பலரிடம் கடன் பட்டுவிட்டு வாரண்டுகளுக்காகப் பயந்து தப்பித்துக்கொண்டு கலையனூருக்கு ஓடி வந்து விட்டான். அவன் வேறு அகௌரவமான குற்றம் ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லை.

கர்னல் குமரவேலும் அவனும் பேசிக்கொண்டே சரவணனுடைய கப்பல் இருக்கும் துறைமுகத்தை நோக்கிச் சென்றார்கள். வழியில் விசுவநாதன் கர்னலை நோக்கி,

"கர்னல்! நீ இன்னும் எவ்வளவு காலம் இங்கு தங்கியிருப்பாய். உன்னுடைய அந்த விவகாரம் வழிக்குவந்து விட்டதல்லவா?" என்றான்.

கர்னல்.—அதில் அதிக ஆபத்தான விஷயம் ஒழிந்தது. ஆயினும் இன்னொரு விஷயம் இருக்கிறது. இன்

னும் ஒருவாரத்திற்குள் அது அனுகூலமாக முடியா விடியின் என்பாடு பெரிய திண்டாட்டத்தில் வந்து விடும். நண்பரே! நான் உண்மையைக் கூறுகி றேன், மதனம்பாள் சீமாட்டியின் உதவியையெதிர் பார்ப்பதற்கு எனக்குக் கொஞ்சம் சுதந்தரம் இருக் கிறது..." என்றதே,

விசுவநாதன்.—ஆ! மதனம்பாள் சீமாட்டியா? ஏதோ காதல் விஷயமோ?

கர்னல்.—இல்லையில்லை. நான் வீண்பெருமைக்காக இத் தகைய விஷயத்தில் பொய் கூறமாட்டேன். எனக்கு வேறு விஷயத்தில் அம்மாது உதவி செய்யப் பந் தப்பட்டவள். ஆனல் இச்சமயத்தில் அவள் சுத்த நன்றி கெட்டத்தனமாய் நடந்து கொள்கிருள். ஆகா! நான் மட்டும் மறுபடி இலவணபுரி போய்ச் சேர்ந்தால் அவள் மேல் பயங்கரமான வஞ்சம் தீர்த் துக்கொள்வேன்.

விசுவநாதன்.—ஏன்? அவள் அரசனிடம் மிக்க செல்வாக் குடையவள் என்று கேள்விப்பட்டேனே.

கர்னல்.—அரசனுடைய குணம் ஒரு மாதிரியில்லை. ஒரு சமயம் இவள் பேச்சுப்படி நடப்பான். ஒரு சம யம் இன்னொரு காதலியின் பேச்சுப்படி நடப்பான். அவனுக்கு எச்சமயம் எவளால் அனுகூலமிருக்கிற தோ அவள் பேச்சையே வேதவாக்கியமாகக்கொள் வான். தற்சமயம் மதனம்பாள் சீமாட்டியே செல் வாக்கிலிருந்தாலும், குமுதவல்லிச் சீமாட்டி என் பவள் அவள் செல்வாக்கை யழித்துவிட்டுத் தான் பழையபடி முதன்மை ஸ்தானத்தை வகிக்க மிக்க தந்திர சாமார்த்தியமான முயற்சிகளை யெல்லாம்

செய்கிறாள். ஆயினும் அவளை வெல்ல மதனும்பா ளிடம் இன்னும் தக்க ஆயுதம் கிடைக்கலாகும்.

விசுவநாதன்.—ஆ! மதனும்பாள் சீமாட்டி என்னவே ஒரு விஷயம் உன்னைக் கேட்க விரும்புகிறேன். ஞானப்பிரகாசம் என்ற குருவைப்பற்றி நீ கேள்விப் பட்டிருக்கிறாயோ?"

கர்னல்.—அவள் சம்பந்தமாக இக்கேள்வியை நீ கேட்ப தால் அவர்கள் இருவர்க்கும் ஏதோ சம்பந்தம் இருப் பதாகத் தெரிகிறது. உண்மையை விவரமாகக் கூறும். அதில் எனக்கு அனுகூலமான விஷயம் ஏதேனும் இருந்தால் உம்மை நான் மறக்கமாட் டேன்.

விசுவநாதன்.—ஞானம்பிரகாசம் குருவாக இருந்தவர் பிறகு துர்நடக்கைகளால் அப்பதவியை யிழந்து விட்டபோதிலும், இன்னும் யாவரும் அவரை குரு வைப்போலவே உபசரிப்பது வழக்கமாய்விட்டது. அவரும் நமது ஹோட்டலுக்குத் தினம் வருபவர் தான். ஏழெட்டு நாட்களாகப் பாரிசவாயுவாய் நடக்க முடியாமல் வீட்டிலேயே யிருக்கிறார். அவர் மதனும்பாளைச் சிறு வயதிலிருந்து அறிவார். அவர் அவர்கள் குடும்ப குருவாகவிருந்தவர். மதனும் பாள் முதலில் கன்னிகைகளின் சன்னியாசமடத்தி லிருந்த போது அவர் அங்கிருந்தார். அச்சமயம் அவள் பாபமன்னிப்பு கேட்டுக்கொண்டதில் ஏதோ இரகசியம் இருக்க வேண்டுமென்று தெரிகிறது. அது எனக்கெப்படி தெரியுமென்றால் அவர் நன்றா கக் குடித்துவிட்டிருக்கும் சமயத்தில் " ஆ! அந்த மதனும்பாளைப்பற்றி நான் பேசுவதாயின் எத்த

கைய அபூர்வமான சங்கதியை வெளியிடுவேன் தெரியுமா?'' என்று இரண்டொரு முறை கூறியிருக்கிரூர். ஆனல் யார் என்ன தந்திரமாகக் கேட்டாலும் அதற்குமேல் ஒன்றும் கூறமாட்டார். குடிப்பது, கேளிக்கையா யிருப்பது, முதலிய விஷயங்களில் அவன் நம்மைப்போலவே யிருப்பினும் இந்த விஷயத்தில் மிக்க சாக்கிரதையாக விருப்பவன். சமயத்தில் மௌனம் சாதிப்பான்.

கர்னல் குமரவேல், "மதனம்பாளைப்பற்றி அவன் அப்படியா கூறினன்!'' என்றதே, அவன் முகத்தில் ஒரு விதப்பிரகாசம் உண்டாகியது. ஆனல் சற்று சிந்தித்ததும் உடனே அப்பிரகாசம் மாறி முகம் இருளடைந்தது. அவன் விசுவநாதனை நோக்கி "மதனம்பாள் வெளிவரலாகாது என்று எண்ணத்தக்க இரகசியம் ஏதேனும் இந்த குருவுக்குத் தெரிந்திருந்தால், இவன் ஒருவார்த்தையில் அம்மாதைப் பயமுறுத்தி அவளிடமிருந்து தன் ஜீவனத்திற்கு வேண்டிய பொருளைப் பிடிங்கிக்கொள்வானே?'' என்ருன்.

விசுவநாதன்:—எனக்குத் தெரிந்த மட்டில் நான் கூறினேன். ஆனல் எனக்கொரு சந்தேகமட்டும் உண்டு.

கர்னல்:—நண்பரே! அதைத் தயவுசெய்து கூறும். உமக்கு உதவி செய்யத்தக்க ஒரு சினேகன் வேண்டுமாயின் நான் அச்சினேகிதனுக விருப்பேன். நான் எப்படியும் சீக்கிரத்தில் இலவணபுரிக்குத் திரும்பிவிடுவேன். உமக்கு வேண்டிய உதவி செய்வேன்.

விசுவநாதன்:—எனக்குள் இருக்கும் சந்தேகமாவது, அக்குரு இப்போது தன் சுற்றத்தாரில் யாரோ ஒருவர் இறந்து போனதாகவும், அவர்கள் தமது சொத்

தைத் தனக்கு வைத்துவிட்டுப் போனதாகவும், அதனால் தான் ஜீவித்து வருவதாகவும் கூறிக்கொண்டிருக்கிறார். அது பொய்; அத்தகைய சுற்றத்தாரே ஒருவரும் இருந்திருக்கவில்லை. இப்போது அவர் ஜீவனத்திற்குப் பணம் மதனம்பாள் சீமாட்டி யிடமிருந்தே வந்துகொண்டிருக்கிறது என்பதே என் சந்தேகம்.

கர்னல்:—பெரும்பாலும் இருக்கலாம். ஆயினும் சந்தேகந்தானே.

விசுவநாதன்:—ஆம் நான் கூறுவது சந்தேகந்தான்.

கர்னல்:—நீ கூறுவதால் அவன் அயோக்கியனென்றும் சத்தியத்திற்குக் கட்டுப்படுகிறவனல்லவென்று தெரிகிறது. அதோடு ஏழை. நான் அவனோடு அறிமுகமானல் எனக்கு அனுகூலத்தை யளிக்கத்தக்க சமாசாரம் ஏதேனும் அவன் மூலமாகத் தெரிந்து கொள்ளலாகும்.

விசுவநாதன்:—அவனிடமிருந்து ஒரு சங்கதியைக் கிரகிப்பது சுலபமல்ல. நான் காலை சென்று அவன் தேக சௌக்கியம் எப்படி யிருக்கிற தென்றும் சீக்கிரம் வெளியில் வருவானவென்றும் தெரிந்து கொண்டு வருகிறேன். ஆ! அதோ ஆள் அதோ போகிறான். அவன்றான் ஞானப்பிரகாசகுரு" என்றான்.

அவன் சுட்டுக்காட்டிய திக்கைக் கர்னல் நோக்கிய போது உயரமான ஒரு வயோதிகன் சற்று தூரத்தில் மிக்க கஷ்டத்தோடு கைக்கோலை யூன்றிச் சென்றுகொண்டிருப்பதைக் கண்டு, விசுவநாதனை நோக்கி "ஆ! தயவு செய்து இவனை எனக்கு அறிமுகமாக்கிவை" என்று ஆவலோடு கேட்டான்.

விசுவநாதன் :—கர்னல்! இப்படியவனைச் சந்திக்கலாகாது. ஏதோ உட்கருத்துகொண்டு நீர் அவனிடம் சினேகம் செய்வதாக அவனுக்குக் கொஞ்சம் சந்தேகம் உண்டாய் விட்டதோ, அப்புறம் அவனிடமிருந்து எதைக் கிரகிப்பதும் மிக்க கஷ்டமாய்விடும். இப்போதவள் வெளியில் வந்து உலவும் நிலைமைக்கு வந்துவிட்டவரையில் எப்படியும் ஹோட்டலுக்கு வருவான். அங்கு அவனைச் சந்தித்துச் சினேகமாகப் பேசிக்கொண்டே தாராளமாகச் சாராயத்தைவாங்கி யளித்து அதற்கு அவன் பாகத்திற்கு அளிக்கவேண்டிய பணத்தை நீரே யளித்துவிட்டால், அப்போதவன் உம்மிடம் மிக்க சினேகம் கொள்ள ஆவலடைவான். அச்சமயத்தில் பக்குவமாகக் கேட்டால் எல்லா இரகசியங்களையும் கொட்டி விடுவான்" என்றான்.

கர்னல்:—அதுசரிதான். அவன் ஹோட்டலுக்கு வராமலே யிருந்து விட்டால் நான் எப்படி அவன் அறிமுகத்தைப் பெறுவது?

விசுவநாதன்.—"அவனு ஹோட்டலுக்கு வரமாட்டான்? இராத்திரிக்கு வரத்தவறினல் நாளையிரவு கட்டாயம் வருவானென்று நான் பந்தயங்கட்டுகிறேன்" என்றான்.

கர்னல் குமரவேல் சரி நீ கூறுகிறபடி செய்யவேண்டியதே யென்றான். விசுவநாதன் மணிபத்தாகிறது. நமது புது நண்பர் சரவணபிள்ளை யெத்தகைய விருந்தளிக்கிறார் பார்ப்போம். அவர் கப்பலை நோக்கிச் செல்வோம். இதுவரை நமது மற்ற நண்பர்களும் வந்திருப்பார்கள்" என்றான். கர்னல் "அவனிடமிருக்கும் சுவரன்களில்

இன்னும் எவ்வளவு நம்மிடம் வரும் என்பதையும் பார்ப்போம்" என்று கூறிக்கொண்டே நகைத்தான். விசுவநாதன் "இத்தகைய வேட்டை மாதமொன்று கிடைத்தாலும் போதும் என்றான். இவர்களிவ்வாறு பேசிக்கொண்டே கப்பலிருக்குமிடத்திற்குச் சென்றார்கள். இன்னும் சரவணப்பிள்ளையிடம் சூதாடி பெருந்தொகை யபகரிக்கலாமென்று கர்னல் மிக்க சந்தோஷமாக விருந்தான். மூடன்-சுத்த மூடன்-துஷ்டர்கள் கடவுள் இருக்கிறார் என்பதை நினைப்பதே யில்லை. தங்கள் கெட்ட எண்ணத்தை யீடேறவொட்டாமற் செய்து தங்களுக்குத் தக்க தண்டனை யளிக்கும் சர்வவல்லமையுடைய ஒருவன் எங்குமிருந்து யாவும் பார்த்துக்கொண் டிருக்கிறான் என்பதை மறவாத ஒருவன் ஒரு போதும் தீய எண்ணத்திற்கு இடங்கொடான். அவன் உள்ளம் எப்போதும் பரிசுத்தமாகவே யிருக்கும். ஏகசக்ராதிபதியாகிய தன் எஜமானிடம் என்னேரமும் அருகிலிருந்து கொண்டே ஊழியம் செய்யும் ஒருவன் "நான் கபடின்றி மெய்ப்பக்தியோடு ஊழியம் செய்கிறேனென்று நமது எஜமான் அறிவார் ஆதலின் நம்மேல் அன்பு காட்டுவார்" என்ற நம்பிக்கையான உணர்ச்சியால் எவ்வாறு மனதில் பெருமையும் சந்தோஷமும் கொள்வானோ, அத்தகைய சந்தோஷமே மேற்கண்ட பரிசுத்த முள்ள முடையவனும் அனுபவிப்பான். இனி நமது பரமதுஷ்டப் பூச்சியாகிய கர்னல் குமரவேலின் தீய எண்ணம் எவ்வாறு பலனை யளிக்கிறதென்று பார்ப்போம்.

கர்னலும் விசுவநாதனும் கடலோரம் சேர்ந்து சரவணனுடைய கப்பலினருகில் நின்றார்கள். "மற்ற நண்பர்கள் ஒருவரும் இன்னும் வரவில்லை" என்று கர்னல் கூறியபோது விசுவநாதன் "எப்படியும் வருவார்கள்.

186 480

# மின்சாரமாயவன்.

ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்டது.

இது ஓர் மிக்க அபூர்வமான கள்ளன் சரித்திரம். கதாநாயகனாகிய மின்சாரமாயவன் என்னும் கள்ளன் கல்வியும், புத்திசாமர்த்தியமும், தீரமும் உடையவன். ஆதலால் அவன்செய்கைகள் ஒவ்வொன்றும் மிக்க பிரமிப்பை யுண்டாக்கத்தக்கதா யிருக்கும். அவன் ஆபத்தில் சிக்கிக்கொள்ளும் ஒவ்வொரு சமயமும் தப்புவான் என்று ஒருவரும் கருதார்கள். இது அறிவாளிகளுக்கும் மிக்க விருப்பத்தையும், உலக அனுபவம்பெற அறிந்து கொள்ள வேண்டிய பல விஷயங்களையும் அளிக்கக்கூடியது ஆதிமுதல் அந்தம் வரை மனதைக் கவர்ந்து கொள்ளத்தக்கது. பெண்களைக் கட்டில் வையாது ஆண்பிள்ளைகளை விடுவதுபோல் விட்டு விடுவதால் நேரிடும் விபரீதங்களை இதில் அனுபவமாய்க் காணலாம். நல்ல கடிதத்தில் சுத்தமாய்ப் பதிப்பிக்கப்பட்டது. சுமார் 350 பக்கங்களுக்குமே லுடையது.

விலை ரூபா 1—8—0.

புது! துப்பறியும்!! நாவல்!!!

வெளியாய் விட்டது.

## மஞ்சள் அறையின் மர்மம்

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் வரையப்பட்டது.

இதுகாறும் அவரால் வரையப்பட்ட அனேகம் துப்பறியும் நாவல்களையும், இதர துப்பறியும் நாவல்களையும் வாசித்திருப்போர் இத்தகைய மிக்க ஆச்சரியமும் சாமர்த்தியமுமான துப்பறியும் நாவல் இதுகாறும் எழுதப்படவில்லை யென்று எளிதில் உணர்வார்கள். இதில் குற்றம் செய்தவனுடைய சாமர்த்தியச்செயல்களும், குற்றத்தைக் கண்டு பிடிப்பவனுடைய சாமர்த்தியச்செயல்களும் ஒன்றுக்கொன்று இணையற்றனவாகவே யிருக்கும். குற்றம் நடந்த இடத்தின் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. காகித விலையால் சொல்ப பிரதிகளே அச்சிடப்பட்டன. விலை ரூ. 1 8 0

தபால் கூலி பிரத்யேகம்.

---

விலாசம்:— ஆனந்தபோதினி ஆபீஸ்,

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி,

சௌகார்பேட்டை, மதராஸ்.

# "ஆனந்தபோதினி"

## ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஆம் ஜூலையீ முதல் சென்னையில் பிரசுரி கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலெள கீக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த் ஞானபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ் கையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறு களுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திம களும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடை கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் மிக்க நேர்த்தியான பு நாவல்களும் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வருகின்றன. இப் போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரையுடையது. இத ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீ யும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மை யொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக் குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத் தப்பட் டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடு களுக்கு ரூபா 1-4-0. மாதிரி காப்பி வேண்டுவோர் 1 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் | ரூ. | அ. | தினகரசுந்தரி | ரூபா 1 | ( |
| 2-பாகமும் | ... 3 | 8 | பத்மாஸனி | ... 0 | 14 |
| கற்கோட்டை | ... 2 | 0 | வீரநாதன் | ... 0 | 12 |
| தேவசுந்தரி | ... 1 | 4 | ஆனந்தசிங் (மறுபதிப்பில்) | | |
| கனகபூஷணம் (மறுபதிப்பில்) | | | பவளத்தீவு-அச்சில் | | |
| சுவர்ணம்பாள் | ... 0 | 12 | பூங்கோதை | ... 0 | 1( |
| கமலசேகரன் | ... 1 | 4 | மின்சாரமாயவன் | ... 1 | [illegible] |
| மதனபூஷணம் | ... 1 | 0 | குணசுந்தரன் | ... 0 | [illegible] |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸரு | | | சகோதரவாஞ்சை | 0 | [illegible] |
| டையசரித்திர உபதேசங்கள் | 1 | 12 | ஹை-ஸ்கூல் பதிப்பு | ... 0 | 7 |

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்

Printed at the "Ananda Bodhini" Power Press, Madras.